பக்கங்கள் : பன்னிரண்டு

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 மார்கழி 14 ஞாயிற்றுக்கிழமை (30.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 34

# போர்நிறுத்த ஒப்பந்தத்தை முறித்து புலிகளைத் தடை செய்ய வேண்டும்



## கோத்தபாய ராஜபக்ஷ அறிவிப்பு

கொழும்பு,டிசெம்பர்30

போர்நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துவிட்டு - முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டு - தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்யவேண்டும்.

அரசாங்கம் போர்நிறுத்த ஒப்பந்தத்தை ரத்துச்செய்துவிட்டு விடுதலைப் புலிகள் மீது உத்தியோகபூர்வமான தடைவிதித்தால் -

அதன்பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான புதிய வழிமுறைகளை ஆரம்பிக்க முடியும்.

இவ்வாறு அறிவித்திருக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ.

அரசாங்கப் பத்திரிகையான 'டெய்லி நியூஸ்' ஆங்கில இதழுக்கு அளித்த விசேட செவ்வியில் அவர் இவற்றைத் தெரிவித்திருக்கிறார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாளை இரவு ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

குடாநாடு மற்றும் தீவகப்பகுதியில் நாளை திங்கட்கிழமை இரவு நேர ஊரடங்கு நீக்கப்படும் என்று பலாலி ஊடகப் பிரிவு நேற்றிரவு அறிவித்துள்ளது.

கிறிஸ்தவ மக்கள் புத்தாண்டுப் பிரார்த்தனைகளில் பங்கு பற்றுவதற்கு வசதியாக ஊரடங்கு நீக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## புலிகளின் குரல் வளாகம் நேற்றுமுதல் பார்வைக்கு

கிளிநொச்சி,டிசெ.30

விமானப்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி அழிந்த 'புலிகளின் குரல்' நிறுவன வளாகம் நேற்று சனிக்கிழமை தொடக்கம் மக்கள் பார்வைக்கு விடப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி மாவீரர் நாளன்று ஸ்ரீலங்கா விமானப்படையின் தாக்குதலில் 'புலிகளின் குரல்' வானொலி

(12ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று நண்பகலில் முகமாலையில் மோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.30

முகமாலையில் நேற்றுச் சனிக்கிழமையும் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

நேற்று நண்பகல் 1.45 மணியளவில் தமது பிரதேசத்துக்குள் முன்நகர்ந்து வந்த படையினர் மீது தாக்குதல் நடத்தி அவர்களை பழைய நிலைக்கு விரட்டிவிட்டதாகவும் -

பின்னர் தாம் மேற்கொண்ட தேடுதலில் படையினர் விட்டுச்சென்ற கிளைமோர் மற்றும் பொருள்களை மீட்டதாகவும் - விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் முன்னேறிய படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் பரப்பாங்கண்டலில் மோதல்; ஒரு முனையில் இரவிலும் தொடர்ந்தது

மன்னார்,டிசெ.30

மன்னார் பரப்பாங்கண்டலுக்கு மேற்குப் பக்கமாக மூன்று முனைகளில் முன்னேறிய படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றுள்ளது.

அதிகாலை இரு முனைகளில் முன்னேறிய படையினரை தாம் பழைய நிலைக்கு விரட்டிவிட்டதாகவும் மூன்றாவது முனையில் நேற்றிரவு வரை தொடர்ந்து சண்டை நடைபெற்றதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

**புலிகள் தரப்புத் தகவல்**

மன்னாரில் ஸ்ரீலங்கா படையினரின் பாரிய அளவிலான முன்நகர்வு நடவடிக்கைகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

### உயிர் அச்சுறுத்தலுக்கு ஆளாகிய

## மனோ கணேசன் எம்.பி. வெளிநாடு செல்கின்றார்

கொழும்பு,டிசெ.30

உயிருக்கு அச்சுறுத்தல் தொடர்ந்தும் உள்ள நிலையில் தனக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதால் இலங்கையை விட்டு வேறு நாடு ஒன்றுக்கு தற்காலிகமாகச் செல்வதென மேலக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தீர்மானித்துள்ளார்.

மனோ கணேசன் எம்.பிக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு கடந்த 18 ஆம் திகதி முதல் திடீரென விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும் மனோ கணேசனின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது என்று பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. உயர்தர பெறுபேறு நாளை வெளியாகும்

யாழ்ப்பாணம்,டிசெ.30

கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் நாளை திங்கட்கிழமை வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைப் பெறுபேறுகள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும். அத்துடன் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்திலும் இவற்றைப் பார்வையிட முடியும் என்று பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார். (2)

## யாழ். நோக்கிவந்த பயணிகள் விமானம் திரும்பிச் சென்றது

யாழ்ப்பாணம்,டிசெ.30

இரத்மலானையில் இருந்து பலாலி நோக்கிவந்து கொண்டிருந்த தனியார் விமான சேவை ஒன்றுக்குச் சொந்தமான விமானத்தின் என்ஜினில் திடீரெனத் தீ பிடித்துக்கொண்டது. அதனால் விமானம் இரத்மலானைக்குத் திருப்பிச் செலுத்தப்பட்டு தரையிறக்கப்பட்டது.

குடாநாட்டில் இயங்கும் ஐ.நா நிறுவனங் களில் பணிபுரியும் ஊழியர்கள் யாழ்ப்பாணம் வருவதற்கென வாடகைக்கு அமர்த்திய இந்த விமானம் நேற்று முற்பகல் 11 மணியளவில் இரத்மலானையில் இருந்து பலாலி நோக்கி புறப்பட்டது.

புறப்பட்ட சில நிமிட நேரத்தில் விமானத்தின் என்ஜின் திடீரென தீப்பற்றிக் கொண்டது என்றும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

### தாக்குதல் சம்பவத்தை அடுத்து

## மட்டு. சிறையில் இருந்து 5 கைதிகள் பொலநறுவவுக்கு நேற்று இடமாற்றம்

மட்டக்களப்பு , டிசெ.30

மட்டக்களப்பு சிறைச்சாலையில் நேற்று முன்தினம் தமிழ் அரசியல் கைதிகள் மீது இடம்பெற்ற தாக்குதலை அடுத்து ஐந்து தமிழ் கைதிகள் பொலநறுவ சிறைச் சாலைக்கு நேற்று மாற்றப்பட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பை சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐந்து கைதிகளே பொலநறுவவுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இத்தாக்குதல் சம்பவம் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினருக்கும் கருணா குழு உறுப்பினருக்கும் இடையிலேயே

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊடுருவித் தாக்கும் முயற்சி முறியடிப்பு

கிளிநொச்சி, டிசெ. 30

மணலாறு சிலோன் தியேட்டர் பகுதியில் வெடிவைத்தகல்லு என்னும் இடத்தில் ஊடுருவி கிளைமோர்த் தாக்குதல் நடத்த வந்த படையினரை விரட்டியடித்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தமது தாக்குதலை அடுத்து தப்பி ஓடிய படையினர் முகாமில் இருந்து கடும் ஆட்லறித் தாக்குதலை நடத்தினர்.

படையினர் கைவிட்டுச்சென்ற கிளைமோர் மற்றும் ரவைக்கூடு உள்ளிட்ட பல பொருள்கள் தங்களால் மீட்கப்பட்டன என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.(1)




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

noolaham.org | aavanaham.org

# சிக்கன கடன் வழங்கும் கூ. சங்க வெள்ளிவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், மக்கள் வங்கியின் அனுசரணையுடன் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை அதன் வெள்ளி விழாவை நடத்துகிறது.

காலை 9.15 மணிக்கு சமாசத் தலைவர் சு.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்வார்.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், கூட்டுறவு உதவி ஆணையாளர் பெ.கனகசபாபதி, நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன், மக்கள் வங்கி வடவலய உதவிப் பொது முகாமையாளர் க.ஆனந்தராஜா ஆகியோர் கலந்து கொள்வார்கள். வெள்ளிவிழா மலரும் வெளியிடப்படும். (1-226)

YEAR END SALES

Processor
Intel Celeron 2.80 Ghz LGA
Intel 3.0 Ghz/2M LGA
Intel 3.0 Ghz Duol Core
Intel Core 2 Duo

அதிரடி விலைக் கழிவுடன்

Intel pentium4 3.0Ghz/2m,
Asus Motherboard,
512 DDR 2, 80GbHard Disk,
Combo Drive,
ATX Case with SMPS,
17" CRT Monitor,
Keyboard & Optical Mouse.

Mother board
Intel 945 Desktop Board
Asus 945 - DDR 2
Astrock - DDR 2
Asus - DDR 1
Astrock -DDR 1
MSI DDR 2

Flash
1 GB Kingston
2 GB Kingston
4 GB Kingston

Moniter
15" Intex CRT
17" Intex CRT
15" Samsung CRT
17" MAG CRT
17" View Sonic LCD
17" LG LCD

RAM
256 DDR 1
512 DDR 1
256 DDR 2
512 DDR 2
1 GB DDR 2

CD
banana A Grade
A/L A Grade
20/-

UPS
INTEX Demand More
JONCHN AT&T

Hard Disk
80 GB Sata 7200 RPM
160 GB Sata 7200 RPM

ROM
Combo Samsung
Combo Sony
DVD-RW Samsung
DVD-RW Sony
DVD-RW ASUS

Printer
1020 hp Laser Jet
Hp DeskJet
Hp DeskJet - All in One
Epson LQ - 300+

சகல வீதமான கணனி உதிரிப்பாகங்களை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

hp Laptop 1.6 Ghz Core 2 Duo

All Type Casing 4750/=

MP 3 Player Kingston

hp Toner (No 1)
(இலங்கையில் hp முகவரினால் அங்கீகரிக்கப்பட்டது]
Printer Ribbon , Cartridges and Tonner
Warranty 1 & 3 Years With Service

திருமுருகன் கொம் நெற்
259 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
[ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக]

## மரண அறிவித்தல்

### திருமதி தில்லம்மா யோகலிங்கம்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் தற்போது இருபாலை வீதி, கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தில்லம்மா யோகலிங்கம் நேற்று (29.12.2007)சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், நாகநாதன் -இரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யோகலிங்கம்(ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் மாசிலாமணி (முன்னாள் அலுவலர் - மண்டைதீவு கிராமசபை) அவர்களின் சகோதரியும், நடனேஸ்வரி (ஆசிரியர், கொச்சிக்கடை புனித அந்தோனியார் கல்லூரி), சறோஜினிதேவி (ஆசிரியர், வறக்காபொல முஸ்லிம் ம.வி), பரமநாதன் (டோகா),சகுந்தலாதேவி,தருமநாதன்(வெளிக்கள உத்தியோகத்தர், கரித்தாஸ்-கியூடெக், முன்னாள் திட்ட இணைப்பாளர் - அறவழி போராட்டக் குழு), ஸ்ரீஸ்கந்தராஜா, ரதிதேவி (பிரான்ஸ்) சியாமளாதேவி ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற நடேசபிள்ளை (அதிபர், மண்டைதீவு ம.வி), காந்தகுமார்(Marine Engineer),யாழினி (டோகா), வைபோகராஜா (வைலஜா ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி), மல்லிகா (ஆசிரியை, நுணா வில் மேற்கு அ.த.க பாடசாலை),வசந்தி,சாந்தலிங்கம் (பிரான்ஸ்), விவேகானந்தர் ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவேந்திரன் (நர்த்தன்), கிருஷ்ணாளினி (பௌதிக விரிவுரையாளர், களனிப் பல்கலைக்கழகம்) கேதாரபரன் (ஜனா),பிரதீபன், அபிராமி, அருணியா, நிறோஜினி, தனுஷா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), சரணியா(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கஜமுகலக்ஷ்மி(சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி), யாழினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பிரியதர்ஷினி, (யா/இந்து மகளிர் கல்லூரி), தர்ஷிகன் (யா/இந்துக்கல்லூரி),தனுஷியன்(யா/இந்து ஆரம்பப் பாடசாலை), விவேகா, சாதனா, நிசாந்தன், நிறோசன், தட்சாயனி (யா/இந்து மகளிர் கல்லூரி),கடாட்சனி(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கஜாநந்தா (யா/இந்துக்கல்லூரி), முபீசன்(கொக்குவில் இந்துக் கல்லூரி) விதுஷாளினி(யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (69522)

தகவல்:
தருமநாதன் (மகன்)

# இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், டிசெ.30

யாழ். மாநகர சபையின் வேலைப்பகுதியினரின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இன்று முற்பகல் 10.30 மணிக்கு வேலைப் பகுதி அலுவலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆணையாளர் மு.செ.சரவணபவ கலந்து கொள்வார். (1)

* * *

குடத்தனை, டிசெ.30

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் வாராந்த நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை கற்கோவளம் வேணுகான சபா மன்றம் வழங்கும் சீதா கல்யாணம் என்னும் நாடகம் இடம்பெறவுள்ளது. இந்த நாடகத்தினை வே.நந்தகோபாலன் நெறியாள்கை செய்துள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.30

தூய அன்னை ஸ்ரீ சாராதாதேவியின் 155 ஆவதுஜெயந்தி தினம் இன்று காலை 9.30 மணிக்கு கொக்குவிலில் உள்ள சமிதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சமிதியின் உப - செயலாளர் திருமதி ஜெ. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் 'தூய அன்னை பெண்களுக்கோர் உந்து சக்தி' என்னும் தலைப்பில் உரையாற்றுவார். (1-226)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.28

ஸ்ரீ அம்மா பகவானின் விசேட ஆன்மீக பிரார்த்தனை நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுழிபுரம் சிவமங்கள இல்லத்தில் திருமணமாகாத பெண்களுக்கென பிரார்த்தனையும் இவ்வாண்டின் அற்புத நிகழ்வுகளுக்கு நன்றி தெரிவிக்கும் வழிபாடும் நடைபெறவுள்ளன.

இதேவேளை -

பிரதி சனிக்கிழமைகளில் பிற்பகல் 3 மணிக்கு ஆன்மீக பிரார்த்தனை நிகழ்வும் நடைபெற்று வருகின்றது. (202)

# இன்றைய விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.30

சென்றல் விளையாட்டுக் கழகம் அகவை 6இல் காலடி எடுத்து வைப்பதையொட்டி இன்று கூடைப்பந்தாட்டப்போட்டி ஒன்று ஏற்பாடாகியுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இன்று இடம்பெறும் இந்த ஆட்டத்தில். சென்றல் வி.கவும், ஜொலிஸ்ரார் வி.க வும் மோதுகின்றன. (1)

* * *

வலி.வடக்கு,டிசெ.30

அராலி சில்வெஸ்டர் விளையாட்டுக் கழகம், வலிகாமம் உதைபந்தாட்ட லீக், யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் என்பவற்றின் அனுசரணையுடன் நடத்திவரும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் 3 ஆம் இடம் மற்றும் இறுதிப் போட்டியும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சில்வெஸ்டர் விளையாட்டுக் கழக மைதானத்தில் க.பகீரதன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் வணி கத்துறைப் பீடாதிபதி க.தேவராசாவும் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் உதைபந்தாட்ட வீரரும் மத்தியஸ்தருமான இ. செல்வராசா, சமாதான நீதிபதி சொ.பரமசிவம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். 3ஆம் இடத்துக்கான போட்டியில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழமும் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகமும் -

இறுதியாட்டத்தில் ஏழாலை மயிலங் காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் இளவாலை யங்கென்ஹீஸ் விளை யாட்டுக்கழகமும் - மோதவுள்ளன. (1-86)

## திருத்தி வாசிக்கவும்

நேற்றைய பதிப்பில் 12ஆம் பக்கத்தில் வெளியான திருமதி நாகேஸ்வரன் தங்கமுத்துவின் மரண அறிவித்தலில் அவரது மகனின் பெயரை சிவபவானந்தா என்று திருத்தி வாசிக்கவும். சிவானந்தா என்று பிரசுரமானது தவறாகும்.

## உடன் விற்பனைக்கு

A3 ஒவ்செட் அச்சு இயந்திரம் (டேவிற்சன்) உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 575,K.K.S. வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

யாழ்ப்பாணத்திற்கும், பருத்தித்துறைக்கும் இடையில் 28.12.2007 அன்று பஸ் பயணத்தின்போது தங்க நெக்லஸ் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத் தவர்கள் தயவு செய்து 'மைக்கல் கொலின்பவளம்' 64,மண்பிட்டி தெற்கு, நாவாந்துறை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (69518)

சிவமயம்

## அமரர்கள் பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் ஞாபகார்த்த நூல் வெளியீட்டு விழா

காலம் :- சர்வசித்து வருடம் மார்கழி 14 ஆம் நாள்
இன்று(30.12.2007)ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணி

இடம் :- சர்வதேச இந்துமத குருமார் ஒன்றிய தலைமைச் செயலகம்.
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

வெளியிடப்படும் நூல் :-
மயிலணி சிவஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள் தொகுத்த
"வைதீக விவாஹ பிரயோகம்"

அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்,
ஆனைப்பந்தி.

(69517)

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் அல்பேட்செபஸ்ரியன் அருள்யோதிஸ்வரன்



பத்தாவத்தை,இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் அருள்யோதீஸ்வரன் நேற்று (29.12.2007) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் யோசப் அல்பேட் செபஸ்ரி யன் - ஜமுனாவதி தம்பதியினரின் அன்புப் புதல்வனும், நிறோயினி, வினோஜன்,நிதர்சனா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பத்தாவத்தை,
இளவாலை. (69524)

தகவல்:
குடும்பத்தினர்.

### Dr. இளையதம்பி கந்தையா

கலைமகள் வீதி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கந்தையா (27.12.2007) வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (31.12.2007) திங்கட்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1010/26,கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம். (69521)

தகவல்:
வைத்தியநாதன்
(பெறாமகன்).

### இராசேந்திரம் (மகேந்திரம்) நாகரத்தினம்



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசேந்திரம் நாகரத்தினம் நேற்று (29.12.2007) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் அமரர் கிருஸ்ணபிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மகளும், அமரர் சபாரட்ணம் - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும், இராசேந்திரத்தின் (மகேந்திரம்) அன்பு மனைவியும் கமலாதேவி, செல்வரத்தினம், பத்மநாதன் (ஆனந்தி), பாக்கியநாதன் (அம்பி), சறோஜினிதேவி (இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரியும், நடராஜா, அமரர் தவயோகராஜா மற்றும் பாமாருக்குமணிதேவி, கிருஸ்ணாம்பாள், அமரநாதன், சின்ராசா, அப்பன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.12.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் சகோதரனின் இல்லத்தில் (பொன்னாலையில்) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாலை தெற்கு,
சுழிபுரம். (69515)

தகவல்:
மகேந்திரம் (கணவர்),
பத்மநாதன், பாக்கியநாதன்
(சகோதரர்கள்).

### இராமுப்பிள்ளை முருகேசு



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை முருகேசு 28.12.2007 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற நமசிவாயம் தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயராணியின் (இந்தியா) அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஜெயநாராயணன், ஜெயசீலன் (இந்தியா), ஜெயகாந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜேஸ்வரியின் அருமை அண்ணாவும் கனகசிங்கம் (அம்பாள் புடைவையகம், புத்தூர்), ஜெயமணி, ஜெயதேவி, ஜெயச்சந்திரன், ஜெயக்குமார் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சண்முகதாஸ் (மல்லாகம்), சாரதா (லண்டன்) ஆகியோரின் மாமனும் ஜெயபாலசிங்கத்தின் (லண்டன்) சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (06.01.2008) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பங்களா வீதி,
மல்லாகம். (69516)

தகவல்:
திருமதி ராஜராஜேஸ்வரி கனகசிங்கம்
(சகோதரி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்போதோ குறி வைத்த பயங்கரவாதிகள்! இப்போதுதான் அது கை கூடியது!!



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவுக்கு அல்கெய்டா அமைப்பு, ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டி உள்ள மாகாணங்களில் வசித்து வரும் பழங்குடியின் பயங்கரவாதிகள், உள்நாட்டில் உருவான பயங்கரவாதிகள் எனப் பலரும் கொலை மிரட்டல் விடுத்து இருந்தனர். ஒட்டுமொத்தமாக அனைத்து பயங்கரவாத அமைப்புக்களும் அவர் மீது கோபம் கொண்டுள்ளதையே இது வெளிப்படுத்தி உள்ளது.

பெனாசிர் பூட்டோ ஒக்ரோபர் 18ஆம் திகதி நாடு திரும்பினார். கராச்சியில் அன்றைய தினம் பேரணியும் நடந்தது. இதில், மனித வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டதில் 140 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கு அல்குவைதா மற்றும் தலிபான் பயங்கரவாதிகள்தான் காரணம் என பெனாசிர் குற்றம்சாட்டியிருந்தார். மேலும் அதிபர் முஷாரப் நிர்வாகத்தில் உள்ள சிலர் பயங்கரவாத அமைப்புக்களின் ஆதரவாளர்களாகவும் உள்ளனர். அவர்களும் தன்னைக் கொல்லத் திட்டமிட்டுள்ளனர் என பெனாசிர் ஏற்கனவே கூறியிருந்தார். அல்கெய்டா அமைப்பின் இரண்டாம் கட்ட தலைவன் அய்மான் அல் ஜவாகிரி கடந்த மாதம் ஒரு வீடியோ நாடாவை வெளியிட்டிருந்தார். அதில் பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தவேண்டும் என அழைப்பு விடுத்து இருந்தார். 1990 ஆம் ஆண்டுகளில் பெனாசிர் இரண்டாவது முறையாகப் பிரதமராக இருந்தபோது, அவரைக் கொல்ல முயற்சி நடந்தது. இது தொடர்பாக பாகிஸ்தானைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் ஒஸாமா பின்லேடனின் உத்தரவைப் பின்பற்றுபவர்கள் என அப்போதே பெனாசிர் தெரிவித்திருந்தார். அமெரிக்க ஆதரவு பெற்ற பெனாசிர் பிரிட்டனில் படித்தவர். எனவே, ஜனநாயகம் மீது தீவிர ஆர்வம் கொண்டு இருந்தார். மேலும் பாகிஸ்தானில் இஸ்லாமியப் பயங்கரவாதம் ஒடுக்கப்படும் என சபதமும் தெரிவித்திருந்தார். இது ஆப்கானிஸ்தானை ஒட்டியுள்ள பகுதிகளில் வசித்துவரும் பழங்குடியின் தலைவர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தி இருந்தது. இவர்கள் தலிபான் இயக்கத்தை ஆதரிப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் உள்ள வாசிரிஸ்தானைச் சேர்ந்த பழங்குடியின தலைவர்களில் ஒருவரான பாய்துல்லா மெக்சூத் அளித்த பேட்டி பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகளில் வெளியிடப்பட்டிருந்தது. நாடு திரும்பும் பெனாசிரை மனித வெடி குண்டுகளுடன் வரவேற்பதாக அவர் கூறினார். பின்னர் இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதால் தான் அப்படிக் கூறவில்லை என மறுப்புத் தெரிவித்திருந்தார். பாகிஸ்தான் உளவுத்துறையில் அதிகாரியாகப் பணியாற்றியவர் காலித் காவ்யா. இவர் தன்னை ஒஸாமா பின்லேடனின் நண்பன் என அறிவித்துக்கொண்டவர். அவர் கூறுகையில் பெனாசிருக்கு எதிராக பழங்குடியின மக்கள் வெளிப்படையாகவே கொலை மிரட்டல் விடுத்து வந்தனர். அவர்களில் யாராவது ஒருவர் இந்தக் கொலைக்குக் காரணமாக இருந்திருக்கலாம். அமெரிக்காவின் தாக்குதலுக்கு இலக்கானவர்கள் இந்தப்பழங்குடியின மக்கள். அமெரிக்கா மீதான கோபத்துக்கு இணையாக பெனாசிர் மீதும் அவர்களுக்கு கோபம் இருந்தது - என்றார். ஜெய் உல் முகமது லஷ்கர், இ-தொய்பா ஹிஸ்புல் முஜாகிதீன் ஆகிய பயங்கரவாத அமைப்புக்களும் பெனாசிர் மீது கோபம் கொண்டு இருந்தன. இந்த அமைப்புக்கள் பாகிஸ்தான் இராணுவம் மற்றும் உளவுத் துறையின் ஆதரவு பெற்றவை. இந்த அமைப்புக்களை வைத்துத்தான் காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் குழப்பம் ஏற்படுத்தி வருகிறது. சில காலத்துக்கு முன் அல்கெய்டா அமைப்புடன் இந்தப் பயங்கரவாத அமைப்பு கள் கைகோர்த்துவிட்டன.

ஆப்கானிஸ்தானிலுள்ள வெளிநாட்டுப் படைகளை விரட்டி அடிக்க வேண்டும் என்பதுதான் இந்த அமைப்புக்களின் குறிக்கோள். மேலும், அமெரிக்காவுக்கு உதவி செய்யும் பாகிஸ்தான் மீதும் கோபங் கொண்டு இருந்தன. இந்த அமைப்புகளைச் சேர்ந்த பயங்கர வாதிகள் அழிக்கப்படவேண்டும் என பெனாசிர் கூறியிருந்தார். இதன்காரணமாக இந்த அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்கள் பெனாசிர் கொல்லப்பட வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவித்திருந்தனர். தேசிய பாதுகாப்பு கவுன்ஸிலில் தெற்கு ஆசியப் பகுதியின் இயக்குனராக இருந்த புரூஸ்ரிடல் என்பவர் கூறுகையில் பெனாசிர் கொலைக்கு அல்கெய்டா அமைப்புத்தான் காரணம் என்பது எனது சந்தேகம். பெனாசிரை கொல்ல 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்த அமைப்பு முயற்சித்து வந்துள்ளது. அல்கெய்டா அமைப்பு இதற்குக் காரணம்

## பெனாசிரின் பாதுகாப்பு விடயத்தில் பாகிஸ்தான் அசட்டையாக இருந்ததா?

இல்லை என்றால் அவர்களின் ஆதரவாளர்கள் யாராவது இதைச் செய்திருக்கலாம். அவர்கள் அனைவரும் ஒன்றாகத்தான் பணியாற்றுகின்றனர். பெண் என்பதாலும் மதச் சார்பின்மை கொள்கையை தீவிரமாக ஆதரிப்பதாலும் ஜனநாயகத்துக்கு ஆதரவாக இருப்பதாலும்பெனாசிர் மீது இந்த அமைப்புக்கள் கடும் கோபம் கொண்டிருந்தன.

பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐயின் தலைவராக இருந்து ஓய்வு பெற்ற ஹமித்குல், பெனாசிருக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்புக் குறித்து சந்தேகம் எழுப்பியுள்ளார். அவர் கூறுகையில், 'ராவல் பிண்டிநகரின், லியாத்பாக் பூங்காவில் தான் பெனாசிர் பூட்டோ பேசினார். அந்தப் பகுதி முழுவதையும் பொலிஸார் சுற்றி வளைத்திருந்தனர். அதையும் மீறி மனித வெடிகுண்டாக வந்த நபர் பூங்காவின் பின்பக்க வாசல் மூலம் எப்படி ஊடுருவ முடிந்தது. எளிதாக ஊடுருவிய அந்த நபர் பெனாசிரை துப்பாக்கியால் சுட்டும் வெடி குண்டை வெடிக்க வைக்கவும் செய்துள்ளார். பொலிஸ் பாதுகாப்பையும் மீறி அவர் ஊடுருவிய சம்பவம் எனக்கு வியப்பை ஏற்படுத்துகிறது' என்றார்.

பெனாசிர் பூட்டோவின் நண்பர் மார்க் சீகல் வாஷிங்ரனில் வசித்து வருகின்றார். அவர் கூறியதாவது: தான் கேட்ட அளவுக்கு பாதுகாப்பு அளிக்கப்படவில்லை என்ற கவலை பெனாசிருக்கு எப்போதும் உண்டு. குறிப்பாக தொலைபேசிகளை செயலிழக்கச் செய்யும் யாமர்க் கருவிகளை அவர் கேட்டு இருந்தார். அவற்றை அரசு வழங்கவில்லை. இது தவிர சிறப்பு வசதிகள் கொண்ட கார், தான் வாகனத்தில் வெளியே செல்லும்போது பாதுகாப்புக்கு என தனியாக நான்கு கார்கள் ஆகியவை பெனாசிர் கேட்ட பாதுகாப்பு விடயங்கள். ஆனால் பாகிஸ்தான் அரசு அவற்றை வழங்க மறுத்துவிட்டது.

ராவல் பிண்டியில் பெனாசிரின் நடமாட்டத்தை யாரோ பார்த்து கைத்தொலைபேசி மூலம் மனிதவெடிகுண்டு நபரிடம் தெரிவித்திருக்கவேண்டும். இல்லாவிடில் இந்தக் கொடூரத் தாக்குதலை நடத்தியிருக்கவே முடியாது. கராச்சிப் பேரணியில் நடந்த தாக்குதலில் 140 பேர் இறந்தனர். அப்போதும் கைத்தொலைபேசிகளை செயலிழக்கச் செய்யும் யாமர்க் கருவிகள் வேலை செய்யவில்லை. இதை அரசிடமும் பெனாசிர் சுட்டிக் காட்டினார். ஆனால் அவரது குற்றச்சாட்டு அலட்சியப்படுத்தப்பட்டது. ராவல் பிண்டியில் யாமர்க் கருவிகள் இருந்திருந்தால் கொடூர சம்பவம் நடந்திருக்க வாய்ப்பு இல்லை. பெனாசிர் கொலைக்கு அல்கெய்டா அமைப்புத்தான் காரணம் என குற்றம் சாட்டுவது மிகவும் எளிது. ஆனால், மற்ற விடயங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்-இவ்வாறு மார்க் சீகல் கூறினார்.

---


# 2, 3 ஆண்டுகள் கிரிக்கெட்டில் இருப்பேன்; ஓய்வுபெற்றபின் பயிற்சி மையம் தொடங்கி சுழற்பந்து வீச்சுப் பயிற்சியளிக்க உத்தேசித்துள்ளேன்





மனைவி மதிமலருடன் முரளிதரன்

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் அக்கடமி தொடங்கும் எண்ணம் எனக்கு இல்லை. ஆனால் எனது நண்பர் கும்ளே தனியாகப் பயிற்சி மையம் ஒன்றைத் தொடங்கி சுழற்பந்து வீச்சுப் பயிற்சி அளிக்கலாம் என்று எனக்கு யோசனை சொல்லியிருக்கிறார். எனவே தனியாக அமைப்புத் தொடங்கி அந்தப் பணியில் ஈடுபடும் உத்தேசம் இருக்கிறது.




இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இலங்கையணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன்.

தான் சந்தித்த துடுப்பாட்ட வீரர்களில் பிரையன் லாராவுக்கு பந்து வீசுவதே கடினம் எனவும் முரளிதரன் தெரிவித்தார்.

35 வயதான முரளி அண்மையில் உலகில் அதிக டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்தியவர் (708) என சாதனை படைத்தார். அவர் இதுவரை 118 டெஸ்ட் போட்டிகளில் 723 விக்கெட்டுகளை வீழ்த்தி முதலிடத்தில் காணப்படுகிறார். இந்த நிலையில் முரளி தனது கிரிக்கெட் வாழ்க்கை குறித்து அளித்த விசேட பேட்டியில் கூறியிருப்பதாவது:-

எனது 8ஆவது வயதில் கிரிக்கெட் வாழ்க்கையைத் தொடங்கினேன். பாடசாலையில் படிக்கும்போது வேகப் பந்து வீச்சாளராகவும், துடுப்பாட்ட வீரராகவும் இருந்தேன். எனது பயிற்சியாளர்தான், நீ ஏன் சுழற்பந்து வீச்சாளராக முயற்சிக்கக்கூடாது என்று என்னை ஊக்குவித்தார். இதைத் தொடர்ந்து எனது 14 வயது முதல் சுழற்பந்து பயிற்சியை ஆரம்பித்தேன்.

**சுழல் மன்னன் முரளி விசேட செவ்வி**

1991 ஆம் ஆண்டு இங்கிலாந்து சுற்றுப் பயணத்தின் போது தேசிய அணியில் இடம் கிடைத்தது. ஆனால் அங்கு பயிற்சி ஆட்டத்தில் மட்டுமே விளையாட வாய்ப்புக் கிடைத்தது. டெஸ்ட் மற்றும் ஒருநாள்ப் போட்டியில் இடம் கிடைக்கவில்லை. இதன் பின்னர் 1992 ஆம் ஆண்டு ஆஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகம் ஆனேன். பதற்றம் இருந்ததால் இந்த டெஸ்டில் என்னால் சரியாக செயற்படமுடியவில்லை. முதல் இன்னிங்ஸில் ஒரே ஒரு விக்கெட்டாக கிரேக் மெக்டர்மட் விக்கெட்டை கைப்பற்றினேன். இதுதான் எனது முதல் சர்வதேச விக்கெட்டாகும்.

கிரிக்கெட்டில் நான் ஆறு, ஏழு ஆண்டுகள் கழித்துத்தான் ''தூஸ்ரா'' வகை பந்து வீச முயற்சி செய்தேன். சக்லைன் முஸ்ராக்கை பார்த்துத்தான் இந்த ஆசை எனக்கு வந்தது. இதற்கு இரண்டு ஆண்டுகள் தீவிர பயிற்சி எடுத்தேன். முன்பு பந்து வீசியபோது சரியாக நான்கு அல்லது ஐந்து விக்கெட்டுக்களே கிடைத்தது. ஆனால், தூஸ்ரா வகை பந்து வீச்சுக்குப் பின்னர் டெஸ்டுக்கு சராசரியாக ஏழு முதல் எட்டு விக்கெட்டுக்கள் கிடைத்தன. எனது பந்து

## தூஸ்ரா பந்துவீச்சின் மூலம்தான் அதிக விக்கெட்டுக்கள் வீழ்ந்தன

வீச்சுச் சர்ச்சைக்கு உள்ளானபோது கிரிக்கெட் சபை நிர்வாகிகள், அணி வீரர்கள், மக்கள் எல்லோரும் எனக்கு உறுதுணையாக இருந்தார்கள். இதன்மூலம் சோதனையிலும் வெற்றி கண்டேன்.

நான் பந்து வீசிய துடுப்பாட்ட வீரர்களில் எனக்கு சவால் அளிக்கும் வகையில் இருந்தவர் மேற்கிந்திய அணியின் பிரயன் லாரா, சச்சின் டெண்டுல்கரும் சிறந்த துடுப் பாட்ட வீரர்தான்.

ஆனால் சில சுற்றுப் பயணத்தின்போது அவர் காயமடைந்து இருந்ததால் அவரை அதிகமாக நான் எதிர்கொள்ளவில்லை. வேகப்பந்து வீச்சாளர்களில் வசீம் அக்ரம் என்னைக் கவர்ந்தவர். சுழற்பந்து வீச்சாளர்களில் கும்ப்ளே எனக்குப் பிடித்தமானவர். அவர் எனது நண்பருமாவார். நான் கிரிக்கெட் வாழ்க்கையைத் தொடங்கிய காலகட்டத்தில்தான் கும்ப்ளேயும் தொடங்கினார். இலங்கையில் ஜெயசூரிய, அரவிந்த டி சில்வா, சங்கக்கார ஆகியோரின் துடுப்பாட்டம் எனக்குப் பிடிக்கும்.

வோர்ன் சாதனையை சொந்த மண்ணில் முறியடிப்பதே விருப்பமாக இருந்தது. எனது பெற்றோர்,மனைவி, நண்பர்கள், உறவினர்கள், சொந்த மக்கள் முன்னிலையில் சாதனை நிகழ்த்தியது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. வோர்ன் எனக்கு இயன் பொத்தம் மூலம் வாழ்த்துத் தெரிவித்தார்.

எல்லாவற்றுக்குமே ஒரு முடிவு உண்டு. இன்னும் 2 அல்லது 3 ஆண்டுகள் கிரிக்கெட்டில் இருப்பேன். அதன் பின்னர் அடுத்த கட்ட முடிவு எடுப்பேன். அந்தக் காலகட்டத்தில் எத்தனை விக்கெட்டுக்கள் வீழ்த்தமுடியும் என்று கணிக்கமுடியாது.

எனது மகன் நரேன் எந்தத் துறையைத் தேர்ந்தெடுக்கிறானோ அவன் விருப்பப்படியே விட்டு விடுவேன். கிரிக்கெட் விளையாடு என்று கட்டாயப்படுத்தமாட்டோம். அவனது விருப்பம் எதுவோ அதற்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம். 1998 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு

**டிலான்**

எதிராக ஓவலில் நடந்த டெஸ்டில் 16 விக்கெட்டுகள் வீழ்த்தியது மறக்கமுடியாது. இதே போல் 1996 ஆம் ஆண்டு லாகூரில் நடந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவை வென்று கிண்ணத்தை கைப்பற்றியது என்றும் மறக்க முடியாத விடயமாகும். ஒரு தமிழன் என்று சொல்வதில் பெருமையாக இருக்கின்றது. ஆனால் இதில் பிரித்துப் பார்க்க விரும்பவில்லை. இவ்வாறு முரளிதரன் கூறினார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியை மீட்க இராணுவம் நடவடிக்கை; கிழக்கில்இன்னமும் புலிகளின் நடமாட்டம்!

**இன்றைய அரசின் கடந்த இரண்டாண்டு கால நடைமுறைப் போக்கு, நாட்டைச் சீரழிக்கச் செய்து, நாட்டை அராஜகப்படுத்தியுள்ளது. அரசும் மீளமுடியாது மாண்டுபோய் விழி பிதுங்கி நிற்கிறது.**

**சமீப காலமாக அரசின் நிர்வாகக் கட்டமைப்பு சீர்குலைந்து, அரசியல் அரங்கிலும் எதிர்பாராத - திடீர் - அதிர்ச்சி தரும் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இந்நிலையில், நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு போர் மூலமே தீர்வு என அரச தரப்பு திடசங்கற்பம் பூண்டு நிற்கிறது.**

**நாட்டு மக்களை மறந்து, அவர்களுக்கு மாயைத் தோற்றங்களை உருவாக்கிக் காட்டித் தமது அத்தீர்மானத்துக்கு மக்களை வளைத்துப்போட்டு, அவர்களது ஏனைய பிரச்சினைகளைப் பூசிமெழுகிப் போக்குக்காட்டி, அதிகார பலத் தையும் பதவிக் கதிரைகளையும் தக்கவைத்துப் பேணிக் காத்துக்கொள்வதே இன்றைய ஒட்டுமொத்த அரச தரப்பினரதும் ஒரே குறிக்கோளாகியுள்ளது.**

**மறுபுறத்தில், அரசதரப்பின் கபடத்தனம், சூது, போலிவேஷம் மக்களைப் பகடைக்காய்களாக மட்டும் பயன்படுத்தி அவர்களைத் தூக்கியெறியும் குணம், பச்சைச் சுயநலம் என்பவற்றைப் புரிந்துகொண்டு மக்கள் கொதித்தெழ ஆயத்த மாகி வருவதையும் அவதானிக்க முடிகிறது.**

**எதிர்கால விளைவுகள் எவ்வாறு அமையக்கூடும் என்ற வினாவையும் எழுப்பும் விதத்தில் அமைகிறது 'இருதின' பத்திரிகையின் இந்த ஆசிரிய தலையங்கம். இது கடந்த 16ஆம் திகதிய ''இருதின' ஆசிரிய தலையங்கத்தின் தமிழ் வடிவ மாகும்.**

கடந்த ஒருமாத காலத்துள் இந்நாட்டில் அரசியல் ரீதியலான கருமங்களே முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. 'ரொக்கட்' வேகத்தில் அதிகரித்து வரும் பொருள்களின் விலையேற்றம், தென்பகுதிவரை, குறிப்பாகக் கொழும்பு வரை நீண்டுவந்த வடக்கின் யுத்தம் ஆகிய முக்கிய பிரதிபலிப்புகளே இலங்கை அரசியலில் உச்சக் கொந்தளிப்பை ஏற்படுத்திவிடும் - எவராலும் எண்ணிப்பார்க்க இயலாத - அடுத்தடுத்து தொடர்ச்சி சம்பவங்கள் அரங்கேறுவதற்கும் காரணமாக அமைந் தன. நாடாளுமன்றத்தில் என்னதான் நடக்கும்? என்னதான் நடந்துள்ளது? யார் எப்பக்கம் தாவினர்? போன்ற வாதப் பிரதிவாதங்கள் அலுவலகங்கள், கடைகண்ணிகளில் மாத்திரமின்றி பட்டி தொட்டிகள் மற்றும் இல்லங்களின் சமையலறைகள் ஈறாக அலசப்படும் முக்கியத்துவம் பெற்ற விடயங்களாகியிருந்தன. அதற்குக் காரணம் இச்சம்பங்கள் அந்தளவுக்கு நாட்டு மக்களை ஈர்த்து விட்டிருந்ததே ஆகும்.

அந்தவகையில், அரசதரப்போடு ஒட்டிக்கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினரும் 'கோப்' தலைவருமான விஜேதாஸ ராஜபக்ஷ எதிரணிக்குத் தாவிய அதேவேளை, ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரத்னதிலக்க அரசுடன் இணைந்து கொண்டார். அதேபோன்று, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எதிர்க்கட்சித் தரப்பில் ஆசனமேற்று அமர்ந்து கொண்ட வேளையில், அனைவரது கவனமும் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் பக்கமே திரும்பியிருந்தது.

அதேசமயம் ஜே.வி.பியின் பக்கமும் திரும்பியது. அக்கட்சித் தலைவர்களின் கூட்டம் கூடலாமெனவும் எதிர்பார்க்கப்பட்டது. அரசு மற்றும் எதிரணி ஆகிய இவ்விரு தரப்புகளி டமிருந்தும் முரண்பட்ட ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்து வெளிபாடுகள் முன்வைக்கப்பட்டதையே காண முடிந்தது. பகிரங்கத்தில் ஊடகவியலாளர் சந்திப்புகள் இடம்பெற்றன. மறைவில் இரகசியமாக பதவிகள், வரப்பிரசாதங்கள், பணமுடிப்புகள் பரிமாறிக் கொள்ளப்படுவதன் ஊடாக அவற்றைச் சுமந்துகொண்டு உலாவருவதையும், அச்சுறுத்தித் தடுத்து - மறைத்து வைத்துக்கொள்ளல்களையும் காண முடிந்தது.

இவ்வாறு ஒன்றையொன்று மிஞ்சும் வகையில் இடம்பெற்ற சம்பவங்களால் திகைப்புற்று, பெரும் மனக்குழப்பங் களுக்கு உள்ளான நாட்டு மக்கள் தமது பசி தாகத்தையும்கூட மறந்து இந்த அரசியல் நாடகத்தின் பக்கம் தமது பார்வைகளைச் செலுத்திவந்த விதத்தைக் கடந்த பல தினங்களாகக் காண முடிந்தது என ஏற்கனவே குறிப் பிட்டிருந்தமைக்கு - இலங்கையின் அரசியல் அரங்கில் இடம்பெற்ற எவரும் எதிர்பார்க்காத தொடர் சம்பவங்களே காரணமாக அமைந்தன.

**சுற்றாடலை மாசுபடுத்தும் சுவரொட்டி அவதாறுகள்**

ஆனால், இலங்கை அரசியல் அரங்கில் இடம்பெற்ற அனைத்து மாற்றங்களும் பொதுமக்கள் தரப்பிலிருந்தும் இடம்பெறாமையே இங்கு கவலைக்குரியதும் சோகமான துமாகும். நாட்டு மக்கள் இன்றுமுகம் கொடுக்க நேர்ந்துள்ள அவலநிலை காரணமாகத் தமது வயிறுகளை இறுகக்கட்டிக்கொண்டு தமது குழந்தை குட்டிகளுடன் சொல்லொணாத் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்து வரும்போது, கடந்த மாதம் முழுவதிலும் இந்த மக்கள் பிரதிநிதிகள் நாட்டுமக் களின் துயர் துடைப்பதுபற்றி வாய்திறக்கவேயில்லை. மக்களுக்கு பால்மா வகைகளைக் குறைந்தவிலையில் பெற்றுக்கொடுப்பது தொடர்பாகவும் அவர்கள் வாய்திறக்கவில்லை. தமது பதவிகளைத் தக்கவைத்துக்கொள்ளும் உத்திகள் குறித்தும், தமக்கு வழங்கப்பட்டுவரும் எரிபொருளுக்கான கொடுப்பனவை அதிகரித்துக்கொள்வது தொடர்பாகவுமே அக்கறைகாட்டிக் கொண்டனர். அத்தோடு தமக்கு வரப்பிரசாதமாகக் கிடைக்கப்பெற்ற அதிகார பலத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் மார்க்கங்கள் எத்தகையன என்பது குறித்தே ஆராய்ந்தனர்.

அதற்காகத் திரைமறைவில் நடந்த அச்சுறுத்தல்கள், உறுமல்கள், கொடுக் கல் வாங்கல்களை அவதானித்தபோது எந்தளவுக்கு இலங்கையின் அரசியல் அழுக்கு நிறைந்த கீழ்த்தரமான நிலைக்குத் தாழ்ந்து அழுகிப்போய் துர்நாற்றம் வீசுகிறது என்பதை உணர்ந்துகொள்ள முடிந்தது. அந்த வகையில், தம்மை ஆட்சியில் அமர்த்தி விட்ட மக்களின் வாழ்க்கை எவ்வாறானாலென்ன - அவர்கள் எக்கேடு கெட்டுப் போனாலென்ன என்ற விதமா கக் கடந்த மாதம் முழுவதிலும் தமது பதவிகளைத் தக்கவைத்து மேம்படுத்திக் கொள்ளும் அரசியல் வியூகங்களே அவர்களால் மேற் கொள்ளப்பட்டு வந்தன எனக் கூறினால் அதில் புதுமை ஏதுமில்லை. அவர்களது அந்தச் சாதனைக்குச் சமமான வகையில் தினம்தினம் புதுப்புது வடிவிலான சுவரொட்டிகள் தயாரிக் கப்பட்டுக் கொழும்பு நகரிலுள்ள மதிற் சுவர்கள் முதல் பட்டி தொட்டிகள் ஈறாகச் சுற்றடாலை மாசுபடுத்தி ஒட்டப்பட்டமையும் அதற்குச் சமமாகவே அமைந்தது.

வரவு - செலவுத் திட்டத்துக்குச் சார்பாக வாக்களிக்கும் பிரமுகர், நாட்டுப்பற்றாளர் - நாட்டை நேசிப்பவர் எனவும் எதிர்க்கட்சிப் பிரமுகர் தேசத்துரோகி எனவும் முத்திரை குத்தும் செயற்பாடும் அதற்குச் சமமானதாகவே அமைந்தது. திடீரென வடபுலத்தின் மீது யுத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதும் அதற்குச் சமமானதாகவே அமைந்தது. ஆனால், இவை எதுவொன்றிலும் 'நாட்டு மக்களுக்கான நன்மை ஒன்றுகூட இல்லை.

**தம்மை வளப்படுத்துவதில் அரச தரப்பினர் அக்கறை**

நாட்டு மக்களின் அர்ப்பணிப்புகள் அமைச்சர்களுக்கு ஏற்புடையன அல்ல. அவர்களுக்கு ஏற்புடையது தமக்கான எரிபொருள் கொடுப்பனவுகளை நூற்றுக்கு நூறு வீதமாக அதிகரித்துக்கொள்வதாகும். அமைச்சரென்ற பதவி நிலைக்கு மேலதிகமாக மேலுமொரு பதவி நிலையைச் சேர்த்துக்கொள்வதாகும். இதனிடையே, அமைச்சர்களுக்கான வீட்டு வாடகைக் கொடுப்பனவுகள், தொலைபேசிக் கட்டணங்கள், வாகன வசதிகளுடனான அமைச்சர்களின் பராமரிப்புச்செலவினமாக அரசினால் ஆண்டொன்றில் 2 ஆயிரத்து 300 கோடி ரூபா செலவழிக்கப்படுகின்றன. ஆனால், சமுர்த்தி அபிவிருத்தித் திட்டச் செயற்பாடுகள் தொடர்பாக 960 கோடி ரூபாவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது அரச தரப்பினர் தம்மை வளப்படுத் திக் கொள்வதையே காட்டுகிறது. தம்மை வளப்படுத்திக் கொள்ளும் அந்த அதிகரிப்புகளுக்கு வடபகுதி பதுங்குகுழிகளில் நுளம்புத் தொல்லைகளின் மத்தியில், உயிரைப் பணயம் வைத்து, இரவு பகலாகப் போராடி வரும் இலங்கை இராணுவ வீரர்களது போராட்டங்களும் ஈடு வைக்கப்படுகின்றன.

இந்த நாடகங்களை அரங்கேற்று வதால் நாடொன்றை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வது சாத்தியப்படுமா? என்பது இங்கு ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியுள்ளது.

இன்று ஒட்டுமொத்த அரச ராஜதந்திரச் சேவைகளும் கட்டறுத்துக்கொண்டு செயல்படு வதாகவே தெரிகிறது. நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பு குழம்பிப் போயுள்ளது. அதனை நிர்வகித்து நெறிப்படுத்துவோர் எவரும் இல்லை. குற்றச் செயல்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறதேயன்றி, அவை கட் டுப்படுத்தப்படுவதாகத் தென்படவில்லை.

வெளிநாட்டுக் கொள்கையோ பைத்தியக்காரத்தனமானவைகளாக உள்ளன. நாட்டில் இடம்பெறும் கொலைகள், கடத்திச் செல்லப்படுதல், கைதுகள் காரணமாக நாட்டுக்கு எதிரான சர்வதேச ரீதியிலான அறிக்கைகள் போட்டிபோட்டுக் கொண்டு வெளியிடப் படுகின்றன. பட்டியை உடைத்துக் கொண்டு திமிறியோடும் மாட்டைப்போன்று, பொருள்களின் விலைகளும் கட்டுமீறிச் செல்கின்றன. லஞ்சம், ஊழல், பயங்கரம், போஷணை இவையே அரச கொள்கையாகிவிட்டுள்ளது என்றே கருதமுடிகிறது.

# இலங்கை அரசியல் அரங்கில் இடம்பெற்ற அனைத்து மாற்றங்களும் பொதுமக்கள் தரப்பிலிருந்து இடம்பெறாமை கவலைக்குரியது

**நமது அரசியல்வாதிகளின் இலட்சணம் இதுவா?**

இவை இவ்வாறிருக்க இவற்றிற்குப் பரிகாரம் காணும் சிந்தனைப் போக்கில் அரசு செயற்படுவதாகத் தோன்றவில்லை. அதற்குப் பதிலாக எதிர்காலத்திலும் அரசைத் தக்க வைத் துக்கொண்டு அதைப் பேணிப் பாது காத்துக்கொள்வது எவ்வாறு - எத்தகைய உத்திகளை - தில்லுமுல்லுகளைக் கையாள்வது என்பது தொடர்பாகவே சிந்தித்தும் செயல்பட்டும் வருவதையே காணமுடிகிறது. அத்தோடு அரச தரப்பினர் தத்தமது பதவிகளையும் பதவிக் கதிரைகளையும் காப்பாற்றி - பேணிப் பாதுகாத்துக் கொள்வது எவ்வாறு என்பது குறித்தும் சிந்தித்து வருகின்றனர். இவற்றை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கையில், இத்தகைய நகைப்புக் கிடமான கேலிக்கூத்துகளைப் புரிவோரா கத்தான் நாடொன்றின் அரசியல்வாதிகள் இருக்கவேண்டியுள்ளதா? என எமக்கு நாமே வினா எழுப்பிக்கொள்ளவேண்டியுள்ளது.



மறுபுறத்தில், வடக்கில் யுத்தத்தை முன்னெடுப்பது தொடர்பாகக் கூட இன்றைய அரசிடம் காணப்படுவதும் ஸ்திரமற்றதொரு கொள்கையே ஆகும். அந்தவகையில், நாட்டு மக்களுக்கு யுத்த முனைப்பை ஊட்டி - வடக்கில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதான மாயைத் தோற்றத்தை உருவாக்கிக் காட்டி, இதோ! இராணுவம் வன்னியை நெருங்கிவிட்டது என டமாரம் அடித்துக்கொள்ளும் அரசு, கிழக்குப் பிரதேசத்தில் இன்றும் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இருப்பதைப் பகிரங்கமாகவே ஒப்புக்கொள்கிறது. அதேவேளை, பசிக்குக் கேழ்வரகுக் கஞ்சியை உண்டு உயிர்வாழ முடியுமெனக் கூறுமளவுக்கு அரசு மற்றும் அரசின் பங்காளிகள் சிக்கல் நிறைந்த நாட்டின் தேசியப் பிரச்சினையைப் பாரதூரமற்றதொரு சிறு பிரச்சினையே எனக் கருதுவதிலிருந்து அவர்களது-முதிர்ச்சியுறாத தன்மையைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

**மக்கள் என்ற எரிமலை வெடித்துச் சிதறும் அபாயம்**

அது அவ்வாறானதெனின், கடந்து சென்றுள்ள முப்பதாண்டுகள் காலத்துள் இப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கு பத்துக்கும் மேற்பட்ட தடவைகளில் மிக இலகுவான வாய்ப்புகள் அமைந்திருந்தன - இடமிருந்தது. ஆனால், அப்பிரச்சினையை அந்தப் பத்துக்கும் மேற்பட்ட தடவைகளில் தீர்த்துக்கொள்ள இயலாது போனமைக்கு, அது அந்தளவுக்குப் பாரதூரமானது எனக் கருதப்படாமையே காரணமாகும்.

அவ்வாறாயின், அரசின் இன்றைய கடப்பாடு மற்றும் உடனடிச் செயற்பாடாக அமைய வேண்டியுள்ளது அவற்றுக்குப் பரிகாரம் காணும் - பதில்களைத் தேடிக்கொள்வதற்கு காத்திரமான முன்னெடுப்புகளில் இறங்கு வதே ஆகும். அது தொடர்பான கருமமாற்றலில் அரசு ஏற்கனவே பெரிதும் தாமதித்துள்ளது என்பது உணரப்படுவதற்கு, மக்கள் என்ற எரிமலை சூள் கொண்டு வெடிப்பதற்குத் தயாராகி புகை கக்க ஆரம்பித்துள்ளமை கண்கூடாகத் தென்படுவதே காரணமாகும். எந்த நிமிடத்திலும் அந்த எரிமலை வெடித்துச் சிதறி அனைத் தையும் அழித்துக் கட்டும் 'லாவா' குழம்பைக் கக்கக்கூடும்.

அந்த எரிமலை வெடித்துச் சிதறி 'லாவா' குழம்பைக் கக்குவதைத் தடுத்து நிறுத்துவதற்காக அதன் வாயை 'பிளாஸ்ரர்' கொண்டு ஒட்டி மூடிவிட எத்தனிப்பது ஓடும் புகையிரதத்தைக் கைகளால் இழுத்துப்பிடித்து நிறுத்தி விடுவதற்கு எத்தனிப்பதற்குச் சமமானதே என்பதை அரசுக்கு ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது. இது அரசுக்கு உறைக்குமா? *

*தமிழில் : சரா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரிதான அஞ்சல் தலை

படத்தில் காணப்படும் அஞ்சல் தலையின் உண்மையான மதிப்பு 24 சதங்கள் என்ற போதிலும் இது 8.25 லட்சம் டொலருக்கு (இலங்கை மதிப்பில் 7.5 கோடிரூபா) விலை போய் உள்ளது.

இந்த அஞ்சல் தலை கடந்த 1918 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. முதல் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட ஜே.என்.4 ஜென்னி என்ற பயிற்சி விமானம் தலைகீழாக விழுந்து நொறுங்கி இருக்கும் காட்சி இதில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் டல்லாசில் உள்ள பாரம்பரிய பொருள்களை ஏலம் விடும் நிறுவனம் சமீபத்தில் இதனை ஏலத்தில் விற்பனை செய்தது. பழமை வாய்ந்த பொருள்களை சேகரிப்பதில் ஆர்வம் கொண்ட நியூயோர்க்கை சேர்ந்த ஒருவர் அதிக விலை கொடுத்து இந்தள் தபால் தலைமைய ஏலத்தில் எடுத்துள்ளார்.



# இது பியர் மரம்

எதிலும் புதுமை இருந்தால் நன்றாகத்தான் இருக்கும் என்னும் உணர்வோடு சீனாவில் பியர் போத்தல்களைக் கொண்டு கிறிஸ்மஸ் மரத்தை உருவாக்கி உள்ளனர்.

உலகம் முழுவதும் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு பல வகையான கிறிஸ்மஸ் மரங்களை அமைக்கும் வழக்கம் இருக்கிறது. சீனாவில் கொஞ்சம் வித்தியாசமாக பியர் போத்தல்களைக் கொண்டு கிறிஸ்மஸ் மரத்தை வடிவமைத்துள்ளனர்.

சுமார் 4 ஆயிரம் பியர் போத்தல்களைக் கொண்டு இந்த மரம் உருவாக்கப்பட்டுள்ளது. 9 மீற்றர் நீளம் கொண்டதாக உள்ள இந்த பியர் போத்தல்கள் மரம் நள்ளிரவில் வண்ணமயமாக ஒளிர்வது கண்கொள்ளா காட்சியாக இருக்கிறது.



# விஸ்கியில் ஓடும் வாகனம்

மதுபானக்கடைக்குச் சென்று யாராவது விஸ்கி வாங்கினால் அவரை குடிகாரரென்று யாரும் சந்தேகிக்க வேண்டிய அவசியம் இனி ஏற்படாது.

விஸ்கி போதை தருவதற்கு மட்டுமல்ல வாகனங்கள் செலுத்துவதற்கான எரிபொருளாகவும் பயன்படும் என்று சமீபத்தில் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

விஸ்கியைப் பெற்றோலுடன் கலந்து பயன்படுத்தும் போது சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படாது என்றும் இந்தத்தொழிநுட்பம் விரைவில் பயன்பாட்டிற்கு வரும் என்றும் அபர்டே பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

# பியானோ வடிவில் கட்டடம்



இசைப் பிரியர்களை மகிழ்விக்கும் வகையில் சீனாவில் கட்டட வடிவமைப்பாளர்கள் பியானோ மற்றும் வயலின் வடிவத்தில் கட்டடங்களை உருவாக்கி இருக்கிறார்கள்.

சீனாவில் உள்ள அன்ஹூய் மாகாணத்தில் உள்ள ஹூவாய்நான் நகரத்தில் பிரமாண்ட வடிவத்தில் இந்தக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டடத்தின பிரதான பகுதி பியானோ வடிவிலும், அதன் அருகில் கண்ணாடியால் வயலின் வடிவத்தில் ஒரு கட்டடமும் கண்ணைக் கவரும் வகையில் அமைந்துள்ளன.



# கழிவறை இல்லாவிட்டால் கைது

கழிவறை இல்லாமல் வீடு கட்டுவது குற்றமா என்ன? ஆனால் உகாண்டா நாட்டில் இதைக் குற்றமாகக் கருதி 100 பேரை கைது செய்துள்ளனர் பொலிஸார். அதற்காக உகாண்டா அரசு மிகவும் மோசமாக நடந்து கொண்டதாக அர்த்தமில்லை.

நல்ல நோக்கத்தோடே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த நாட்டில் கொலரா போன்ற நோய்கள் பரவுவதால் அதனைக் கட்டுப்படுத்த சுகாதாரச் சீர்கேடுகளைக் களைந்து வருகின்றனர். எனவே எல்லா வீடுகளிலும் தவறாமல் கழிவறை இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

இதனை பின்பற்ற தவறிய 100 பேர் மீது அரசு கைது நடவடிக்கை எடுத்துள்ளது. சுகாதாரத்தை வலியுறுத்த இப்படி கடுமையான நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று அரசு கூறியுள்ளது.

# பருவம் அடைந்த பின்னர் உண்டாகும் பலவகை இயற்கை உணர்வுகளைக் கண்டு அஞ்சாதீர்கள்

வினா 1 ஆண் - வயது 23. சுய இன்பம் அநுபவிப்பதால் ஏற்படும் விளைவுகள் என்ன? இளைஞர், யுவதிகளுக்கு இதனால் தீமைகள் ஏற்படுமா? அதாவது களைப்பு, சோர்வு, முகம் வாடுதல், முதுமை தோற்றம், முதுகுவலி என்பன ஏற்படுமா? தொற்று நோய்கள் ஏற்படுமா? விந்தின் அளவு குறைந்துவிடுமா? பிள்ளைகள் பிறப்பது குறையுமா? சுய இன்பம் அநுபவிப்பதால் நன்மையா? தீமையா? ஒரு நாளில் 5 தடவைகள் சுய இன்பம் அநுபவிப்பதால் உயிரிழப்பு ஏற்படுமா?

விரிவான விளக்கம் வேண்டும்.

விடை 1 பருவ வயது எட்டியவுடனேயே (அல்லது அதற்கு முன்னதாகவே) திருமணம் முடித்து குழந்தைகளைப் பெற்று 40 வயதில் முதியோர் பட்டம்

**சுகநலம்**


பெற்று மக்கள் மரணமடைந்த காலத்தில் (அதனால் தான் முன்பு சனத்தொகை பெருகவில்லை) தாம்பத்திய உறவை மேம்படுத்துவதற்காக மூத்தோர், அறிவோர் காட்டிய "பூச்சாண்டி" என்றே இக் கருத்தைக் கருதவேண்டும்.

காலம் மாறிவிட்டது இப்பொழுது சாதாரணமாக 25-30 வயதிலேயே மணம் முடிக்கின்றனர். 40-45 வயது கூட சில சந்தர்ப்பங்களில் "மணப் பருவம்" ஆகிவிடுகின்றது. அது வரைக்கும் "பூப்படைந்த", "பெரியபிள்ளை" ஆன ஆணோ, பெண்ணோ அவர்களது உடலுறுப்புகளில் ஏற்படும் வளர்ச்சி, மனதில் ஏற்படும் பாலுறவுக் கிளர்ச்சி, தொடர்புடைய ஓமோனகளின் சுரப்பு, ஒளிபரப்பப்படும் காட்சிகள், படங்கள், கதைகள் போன்ற பாலுறவு தாக்கத்தை ஏற்படுத்துகின்ற சூழலில் வருடக் கணக்கில் சுய இன்பம் தேடாது இருப்பது கடினமாகவே இருக்கும். பல கணிப்பீடுகள் மணமாகாதவர்களிடையே சுய இன்பம் பெறுவோரது எண்ணிக்கை 90-96 வீதமாக இருப்பதாகக் குறிக்கின்றது. ஆகவே சுய இன்பம் பெறுவோருக்கு நீங்கள் கூறிய மாற்றங்கள் இருக்க வேண்டுமென்றால் தாம்பத்திய உறவில் ஈடுபடாத "வயது வந்தோரில் 90 வீதத்திற்கும் அதிகமானோர் மரணத்தின் பிடியில் இருக்க வேண்டும்.

நிலைமை அவ்வாறில்லை, விந்து சுரக்கப்பட்டு வெளியேற்றப்படாவிடில் தானாகவே தெரியாமல் வெளியேறும் அல்லது உடலில் உள்ள மற்றக் கலங்களைப் போல மரணித்து அழிக்கப்பட்டு விடும். விந்து முட்டைக் கலங்கள் அவற்றின் உற்பத்தி, வளர்ச்சி, முதிர்ச்சி, மூப்பு, மரணத்தில் மற்றக் கலங்களைப் போன்றே செயல்படுகின்றன. ஆகவே பயப்பட வேண்டாம். வீட்டில் உள்ள நாயைக் கூட கவனித்துப் பார்த்தால் சுய இன்பம் பெறுவது இயற்கை உணர்வு என்பதை அறிந்து கொள்ளுவீர்கள்.

அதற்காக சுய இன்பம் பெறுவதைத் தொழிலாகக் கொள்ள இயலாது. நாம் எந்த வேலையிலும் மிகவும் மன ஒருமைப்பாட்டுடன் தீவிரமாகச் செயற்படும் பொழுது வேலை முடிந்ததும் களைத்து விடுவோம். சுய இன்பமோ அல்லது ஆண்/பெண் பாலுறவோ எதுவாக இருந்தாலும் இவ்விதமே மனிதர் செயல்படுகின்றனர். ஒவ்வொருவருடைய வயது, சக்தி, உடல், உளநிலை, அவசியம் என்பன பொறுத்து எத்தனை முறை ஈடுபடலாம் என்பது காலத்திற்கு காலம் மாறுபடும். ஆகவே இதற்கு ஒரு விதிமுறை கிடையாது.

முடிவாக சுய இன்பம் அனுபவிக்காது விடுவதால் தீமையும் இல்லை, நன்மையும் இல்லை. அல்லது அனுபவிப்பதால் நன்



**"மருத்துவ ஆலோசனை"**
சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவ பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

மையும் இல்லை, தீமையும் இல்லை. இது ஒரு இயற்கையான உணர்வுத் தேவை. தும்மல் வந்தால் தும்முங்கள். இதற்காக தும்பை மூக்கிற்குள் நுழைத்துத் தும்மத் தேவை இல்லையே! எப்பொழுதும் தும்மிக் கொண்டிருந்தால் அது வியாதி. மருந்து தேவை.

வினா 2 ஆண் - வயது -18, ஆண் பாலியல் உறுப்பின் ஒரு விதை கீழே செல்வதற்கான காரணம் என்ன? இதனால் ஏதாவது குறைபாடுகள் இருக்குமா?

விடை 2 விதைகள் உடல் வெப்பம், சூழல் வெப்பம் என்பன பொறுத்து வயிற்றுப் பகுதியில் இருந்து சிறிது கீழே இருக்கின்றன. அவை தசைகளின் இயக்கத்தினால் வயிற்றுப் பகுதியை சூழலிற்கேற்ப அண்மித்தும் விலகியும் இருக்கின்றன. ஏதாவது ஒரு பக்கம் சற்று கீழாகவோ சிறிதாகவோ இருந்தால் அதற்கு எந்த விதமாகவும் சஞ்சலப்பட வேண்டியதில்லை. இது சர்வ சாதாரணம். இரண்டு கைகளிலும் ரேகைகள் ஒரே மாதிரி இருப்பது இல்லையே.


வினா 3 ஆண் - வயது 23

இரவில் நித்திரையில் விந்து வெளியேற்றம் சில வேளைகளில் காணப்படுகிறது அதற்கு உரிய மாற்றுவழி யாது?

விடை 3 எந்த ஒரு காரியத்தையும் அது முடியும் வரை உடல் உள்ளம் இரண்டும் ஒன்றிணைந்து (முழு மூச்சுடன்) செயற்படும்போது களைப்பு ஏற்படுவது இயற்கையே. இந்நிலையில் களைப்பு என்ன, நித்திரையே வருவது நியதி. அப்படியிருக்க ஒரு நாளைக்கு இரண்டு மூன்று முறை சேர்க்கையில், கலவியில், சுய இன்பம் பெறுவதில் ஒவ்வொரு நாளும் ஈடுபட்டால், ஓரேயடியாக சோர்ந்து, களைத்துப் படுத்துக் கொள்ள வேண்டியது தான்.

நமக்கு வேறு வேலைகள் பல இருக்கின்றனவே! படிப்பதில் இருந்து குடும்ப சமூக பாரங்களிலும் ஈடுபட்டு முழு மனிதனாக வாழ வேண்டுமே! ஆகவே சுய இன்பம் பெறுவதை தொழிலாகவே வைத்துக் கொண்டு களைத்து விழுந்து சோர்ந்து படுத்தால்........என்ன எதிர்காலம்? நீங்களே சிந்தியுங்கள்.

கீழ்கண்ட முகவரிக்கு கடித மூலமாகவோ, தொலைபேசி எண்ணுக்கு SMS மூலமாகவோ தொடர்புகொண்டு உங்கள் வினாக்களைப் பதிவு செய்யலாம். அத்துடன் அருகில் காணப்படும் சின்னத்துடன் எம்மால்



**உங்கள் கேள்விகளுக்கு மருத்துவ நிபுணர்கள் பதில் தருகிறார்கள்**

நிறுவப்பட்டுள்ள வினா சேகரிப்பு பெட்டிகளில் உங்கள் வினாக்களை இடுவதன் மூலமும் அவை எம்மை அடைவதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். உங்கள் கேள்விகளும் பதில்களும் பிரதி ஞாயிறு தோறும் உங்கள் உதயனில் பிரசுரமாகும்..

*(உங்கள் வினாக்களில் வயது, பால் என்பன கட்டாயம் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.)*

*மருத்துவ ஆலோசனை*
மருத்துவபீடம், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. *T.P:0777 179268*

# குங்குமம் இட்டுக்கொள்வது அவசியம்

பெண்கள் நெற்றியில் கட்டாயம் வைத்துக்கொள்ள வேண்டியது குங்குமம். அது நடுவகிட்டில் சுமங்கலிகளால் அணியப்படுவதும் உண்டு. வடபாரத மகளிர் இதை ஸிந்தூர் எனச் சிறப்பித்துக் கூறுவர்.

குங்குமம் என்கிற செந்நிறத் தூள் (மஞ்சளை மூலதனமாகக் கொண்டு தயாரிக்கப்படுவது) மகாலட்சுமியை நினைவூட்டுகிறது.

மகாலட்சுமி வாசம் செய்யும் ஐந்து முக்கிய இடங்களில் ஒன்றாக தலைமுடியின் நடுவகிட்டுப் பகுதி கருதப்படுகிறது. அதனால் மணமான பெண்கள் நெற்றியின் நடுவகிட்டுப்பகுதியில் குங்குமம் அணிகின்றனர்.

பெண்கள் தினந்தோறும் நடுவகிட்டில் குங்குமம் இட்டுக்கொள்வது அவசியம். நெற்றியில் தினசரி ஸ்டிக்கர் பொட்டு இடும் பெண்கள் குறைந்தபட்சம் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பண்டிகை நாட்களில் நெற்றியிலும் மஞ்சளான குங்குமத்தையே இட்டுக்கொள்ள வேண்டும். இது அவசியம்.

ஆண்கள் குங்குமப் பொட்டு இட்டுக்கொள்ளக் கூடாது என்று கூறுகிறவர்கள் அறிவிலிகள். அவர்கள் நமது பண்பாட்டுப் பகைவர்களுங் கூட என்பதை உணரவேண்டும். அது போலவே பெண்கள் திருநீறு அணிந்துகொள்வதும் தவறு என்று எண்ணுபவர்கள் மூடர்கள்.

நெற்றியில் விபூதியும் குங்குமமும் அணிவதால் இறைவனிடத்தில் பக்தி உண்டாகும். அன்றாட வாழ்வில் நல்லன நடக்கும். நீண்ட ஆயுள் கிடைக்கும் என்பது சாஸ்திரம் ஆகும்.

நிறைவாக ஒன்று. நீறில்லா, நெற்றி பாழ். கோயில் இல்லா கிராமம் அடவிகாடே என்பதை உணர்ந்து நாம் எந்த சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்களோ அந்த சம்பிரதாயத்திற்கு உரிய மதிப்பளித்து செய்துகொள்ள கூச்சப்படாமல் தன்மானமுள்ள இந்துவாக வாழ்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்காலிக இணைப்புப்பெற்ற வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், டிசெ.30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலையில் தற்காலிக இணைப்புப் பெற்று கடமையாற்றும் வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கான டிசம்பர் மாத வேதனம் வழங்கப்பட்டு வருகிறது.

டிசம்பர் மாதத்திற்குரிய வரவுச் சான்றிதழை வலய நிதிப் பிரிவில் சமர்ப்பித்து வேதனத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (202-207)

## தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 155 ஆவது ஜயந்தி தினம் இன்று



அஞ்ஞான இருளை நீக்கி
அல்லலாம் வெப்பம்
போக்கி
விஞ்ஞான கிரணம் வீசி
வீடுபேறருளும் மணியே!
இஞ்ஞாலம் எல்லாம்
போற்றும்
எந்தை இராமகிருஷ்ணர்
தஞ்ஞான சக்தியான
சாரதா மணியே போற்றி!

ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை.

சுவாமி மதுரானந்தர். (சி/54828)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் செல்லையா சச்சிதானந்தம்

மலர்வு 20-02-1948 உதிர்வு 12-11-2007

கடந்த 12.11.2007 அன்று சிவபதமடைந்த அமரர் செல்லையா சச்சிதானந்தம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் செலுத்தியும் தொலைபேசி மூலமும் கடிதங்கள் மூலமாகவும் எமது துயரில் பகிர்ந்துகொண்டவர்களுக்கும் இரங்கலுரை நிகழ்த்தியும் கண்ணீரஞ்சலி, மலர்வளையங்கள் வைத்து, அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் வேறுபல உதவிகள் வழங்கியோருக்கும், 31 ஆம் நாள் நினைவஞ்சலி கூட்டம் நிகழ்த்தி மதியபோசனம் வழங்கிய தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த பிரதேச செயலர், கிராமஅலுவலர்களுக்கும் மற்றும் சகலருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அளவெட்டி. (69486) குடும்பத்தினர்.


## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (69300)

## இறைச்சிக் கோழி

புறொயிலர் 1Kg 450/= சுத்தம் செய்தது 1Kg 650/= கல்பேட் 1Kg 400/= மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

1. NEW R.S.K. FARM, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.
2. NEW R.S.K. FARM, K.K.S றோட், சுன்னாகம், கொமர்ஷல் பாங் அருகில். (69472)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1972 இல் பிறந்த, 12 இல் செவ்வாயுள்ள, புனர்பூசம் நட்சத்திரமும் கிரகபாவம் 19 உம் கொண்ட உயர்பதவியும் உயர் கல்வித்தரம் (B.A.,Dip in Edu, M.A.) உடைய மணமகனுக்கு அழகான மணமகள் தேவை. சீதனமாக வீடு, பணம் எதிர்பார்க்கப்படும். பாக், தமிழ்வேராத்துடன் தொடர்பு கொள்ளவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும்.

விளம்பர இல. 3040, மே/பா.உதயன்.


## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.30

நீர்வேலி செல்லக் கதிர்காம கோயிலில் நாளை திங்கட்கிழமை நாட்டில் அமைதியும் சமாதானமும் வேண்டி திருவாசக முற்றோதல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலைச் சிறுவர்களின் பஜனை வழிபாடும் இடம்பெறும். (202)

* * *

சுழிபுரம், டிசெ.30

சுழிபுரம் மேற்கு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் இன்று காலைப் பூசையைத் தொடர்ந்து திருவாசகம் முற்றோதல் நடைபெறவுள்ளது. (202-28)

## காசோலைகளைப் பெறுமாறு அறிவுறுத்து

இருபாலை, டிசெ.30

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்திய இந்து சமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான காசோலைகள் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லூர், நாவலர் மணிமண்டபத்தில் வைத்து வழங்கப்படவிருக்கிறது.

எனவே வெற்றியீட்டிய மாணவர்கள் வருகைதந்து பரிசுக் காசோலைகளை பெறுமாறும் அத்துடன் வெற்றி பெற்ற மாணவர்களின் சான்றிதழ்களை அந்தந்த அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் வந்து பெற்றுக் கொள்ளுமாறும் இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கேட்டுள்ளார். (202-79)


## SPOKEN ENGLISH

Speak your way through English

Say what you want to say - Fluently, Effectively, Correctly

**Enjoy using English to**

- Make great friends
- Impress others
- Express yourself
- Be outstanding in any situation
- Improve your career prospects
- Face interviews
- Converse with your friends, subordinates, superiors and business partners in different situations.

**Course Contents**

- Grammar & writing skills
- Speaking & Listening
- Pronunciation, Fluency and key features of spoken English
- Roleplay, reading & adaptation of modern method of communication.

| | |
|---|---|
| Duration | : 4 Months |
| Time | : Saturday & Sunday 12.00 - 3.00 pm |
| Commencement | : 05th January 2008 |
| Register Before | : 05th January 2008 |

BRITISH COLLEGE OF ENGLISH
143, Adiyapatham Road, Thirunelvely.
T.P: 0602216027


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்வி என்னால் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:
31.12.2007- 17.01.2008 பிற்பகல் 2 மணிவரை.

கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி:
18.01.2008- நண்பகல் 12 மணிவரை

கேள்வி திறந்துபார்க்கும் திகதி: 18.01.2008 பி.ப. 2 மணிக்கு

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|
| 1. ஏழாலை உசத்தியோடை இந்து மயான வீதி திருத்தம் | 20000.00 | 575.00 | M8 |
| 2. இணுவில் வேம்போலை வீதி திருத்தம் | 11000.00 | 575.00 | M8 |
| 3. உடுவில் மாரிட்டி வீதி திருத்தம் | 12000.00 | 575.00 | M8 |
| 4. உடுவில் மல்வம் வீதி திருத்தம் | 20000.00 | 575.00 | M8 |
| 5. உடுவில் பாடசாலை வீதி 2 ஆம் தடவை தாரிடல் வேலை. | 4000.00 | 575.00 | M8 |

குறிப்பு: மேற்படி வேலைகளுக்குரிய தார் பிரதேசசபையால் வழங்கப்படமாட்டாது.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதி "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கும் அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி ச.சொக்கலிங்கம்
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
28.12.2007.


## எமது நிறுவனத்தின் ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு,,, O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கணினிக்கற்கை நெறிகள் மானிப்பாயில் ஆரம்பம் !!

சர்வதேச தரம் வாய்ந்த, அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழுடன் கூடிய கணினிக்கற்கை நெறிகள் !!!

- Beginners Diploma in Information Communication Technology (A/L GIT Syllabus, WITH PASCAL & INFORMATION SYSTEM)
- Diploma in computer Hardware servicing Technician (With Electronic)
- Diploma in Desktop Publishing
- Diploma in Mobile Phone Repairing
- Certificate in Internet & e mail



தற்பொழுது பதிவுகள் நடைபெறுகின்றன, உங்கள் பதிவுகளை 03.01.2008ற்கு முன்னர் மேற்கொள்ளவும்.

➡ குறிப்பு :- இக் கணினிக் கற்கைநெறிக்கு மானிப்பாயில் உள்ள ஏனைய நிறுவனங்களை விட மிகக் குறைந்த கட்டணம் மட்டுமே அறவிடப்படும் என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ளவும்!!

மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay. T.P.No:- 060 - 221 - 6433
( மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று தந்தை செல்வாவும் என்.எம்.போன்றோரும் கூறிய தீர்க்கதரிசனங்கள் நிதர்சனமாகும் கட்டத்தில்...

இலங்கைச் சரித்திரத்தில் 1960 ஆம் ஆண்டு இரண்டு வகைகளில் முக்கியத்துவம் வாய்ந்தது. இதே ஆண்டில்தான் இலங்கை இரண்டு பொதுத்தேர்தல்களை சந்தித்தது. இரண்டாவது தேர்வு முழுவதும் முதற்தடவையாக ஒரேநாளில் தேர்தல் நடைபெற்றதும் இதே ஆண்டில்தான். ஒரேநாளில் தேர்தல் நடைபெறுவதற்கு வழிசமைத்த பெருமை அப்பொழுது பிரதமர் பதவியை அலங்கரித்தவரும் காலித் தொகுதி நாடாளுமன்றப் பிரதிநிதியாக நீண்டகாலம் பதவி வகித்தவருமாகிய மான்புமிகு டபிள்யூ தகநாயக்காவையே சாரும்.

இவர் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் படுகொலையை அடுத்து பிரதமர் பதவிக்கு வந்தவர் பிரதமராகப் பதவிக்கு வந்ததும் இவர் கூறிய வார்த்தை ஒன்று மனதில் இன்றும் ஞாபகத்தில் இருக்கிறது. ''தமிழ் மக்கள் இந்த நாட்டில் அனுபவிக்கக்கூடாத அதிக துன்பங்களை அனுபவித்து விட்டார்கள் என்று கூறிய அவர் இன்றும் உயிருடன் இருந்தால் என்ன கூறுவாரோ என்பதை உதயன் வாசகர்களின் கற்பனைக்கு விட்டுவிடுகிறேன்.

### பேரப்பேச்சுக்கள்

1960ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெற்றது. அத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கோ அல்லது ஐக்கியதேசியக் கட்சிக்கோ அரசு அமைக்கும் அளவிற்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆனால் கூடுதலான ஆசனங்களைப் பெற்ற கட்சியென்ற அளவில் ஐக்கியதேசியக்கட்சிக்கு ஆட்சி அமைக்கும் வாய்ப்பு கிடைத்தது. மாண்புமிகு டட்னிசேனாநாயக்க பிரதமரானார்கள். நாடாளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியை தக்கவைப்பதற்காக தந்தை செல்வாவின்தும் அவரது கட்சியினரதும் ஆதரவைப் பெறுவதற்காகப் பேரப் பேச்சுக்கள் நடைபெற்றன. தந்தை விதித்த நிபந்தனைகளுக்குப் பிரதமர் டட்லி சேனநாயக்க இணங் கவில்லை. தந்தையோ தமிழ்பேசும் மக்களுடைய உரிமைகளை வென்றெடுப்பதற்காகத் தமது நிபந்தனைகளில் மிக மிக இறுக்கமாக இருந்தார். இவ்விதமான ஒரு நிலையையே அன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் பெரிதும் விரும்பினர். ஐக்கியதேசியக் கட்சியின் எதிர்ப்புச் சக்திகள் அனைத்தும் ஒன்றுதிரண்டு நாடாளுமன்றத்தில் அதைத் தோற்கடிப்பதில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டன. ஈற்றில் தந்தை செல்வாவும் அவரது கட்சியினரும் மற்றைய எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளுடன் சேர்ந்து நாடாளுமன்றத்தில் வாக்களித்ததன் காரணமாக ஐக்கிய தேசியக்கட்சி அரசு பதவியை விலக்க வேண்டியதாயிற்று. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.



என்.எம்.பேரோ

### 1960 ஜூலையில் மற்றுமொரு தேர்தல்

1960 ஜூலையில் மற்றும் ஒரு பொதுத் தேர்தலை அழகிய சின்னஞ்சிறு தீவான இலங்கை சந்திக்க நேரிட்டது. பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் வெற்றி பெறுவார்கள் என்றும் அப்பொழுது நாடாளுமன்றத்தில் ஐக்கியதேசியக் கட்சி அரசைத் தோற்கடிக்க பெரிதும் உற்ற துணையாக இருந்த தந்தை செல்வாவுடன் அவர்கள் நன்றியறிதலுடன் நடந்து கொள்வார்கள் என்றும் இணங்கிப்போவார்கள் என்றும் தேர்தல் சமயத்தில் பெரிதாக நம்பப்பட்டது. இதற்கு தந்தை செல்வாவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சி.பி.டி சில்வா போன்ற முக்கிய மூத்த தலைவர்கள் அந்நியோன்யமாக உறவாடியதும் ஒரு காரணமாகும்.

> **தமிழர்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்**
> *- தந்தை செல்வா*
>
> **உள் விவகாரங்களை நாமே தீர்க்காவிடில் உலக நாடுகள் தலையிடும்.**
> *- கலாநிதி என்.எம்*

### ஆற்றைக் கடக்கும் மட்டும் அண்ணன் தம்பி உறவுமுறை

அந்தப் பொறுத்த தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றியீட்டினர். இதன் காரணமாக அவர்களுக்குத் தந்தை செல்வாவினதும் அவரது கட்சியினரதும் ஆதரவு தேவை இல்லாமற்போய்விட்டது. புதிய அரசு அமையும் போது தந்தையுடனும் ஏதாவது பேச்சுவார்த்தைகள் நிகழும் என்ற தமிழ் பேசும் மக்களது கனவு கானல் நீராயிற்று எதுவுமே நடைபெறவில்லை. ஆற்றைக் கடக்கு மட்டுந்தான் அண்ணன் தம்பி உறவுமுறை ஆற்றைக் கடந்தபின் நான் யாரோ நீ யாரோ என்ற நிலை.

தேர்தல் முடிவுகளையடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து விமானமூலம் கொழும்பு திரும்பிய தந்தை செல்வாவிடம் செய்தியாளர்கள் தேர்தல் முடிவுகளைப் பற்றிய அவரது அப்பிராயத்தைக் கேட்டார்கள். அதற்கு அவர் சொன்ன மறுமொழி ''ஆண்டவன்தான் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்பது. தேர்தலுக்கு முன் நடந்த இரகசி யங் பேச்சுக்களின்போது அவருக்கு எத்தகைய வாக்குறுதிகள் அளிக்கப்பட்ட என்பது எழுத்தில் இல்லாத இரகசியங்களாகும். பெரியவர் அவற்றைப் பற்றி எதுவுமே கூற வில்லை.

### இன்று அவர்களுக்கு நாளை எங்களுக்கு

1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நாலாம் திகதி இலங்கை சுதந்திரம் அடைந்தகையோடு மலைநாட்டுத் தமிழ் மக்களுடைய குடியுரிமை வாக்குரிமைகளைப் பறிக்கும் மசோதாக்கள் கொண்டுவரப்பட்டபோது தந்தை அவர்கள் சொன்னது என்னவென்றால் ''இப்படியான அநீதிகள் இழைக்கப்படுவது இன்று அவர்களுக்கு (மலையகத் தமிழ் மக்களுக்கு) நாளை எங்களுக்கு அதாவது (இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கு)என்பதாகும்.

### இளைஞர்கள் மறுக்கக் கூடும்

தந்தை செல்வா அவர்கள் ஒருசமயம் ஆளும் தரப்பினரைப் பார்த்துச் சொன்ன மற்றுமொரு தீர்க்கதரிசனமான வார்த்தை என்னவென்றால் நாங்கள் கேட்கின்ற சாதாரணமான உரிமைகளைத்தர நீங்கள் மறுத்து நிற்கின்றீர்கள். ஆனால் பிறிதொரு சந்தர்ப்பத்தில் நாங்கள் இன்று கேட்கின்ற உரிமைகளைவிடக் கூடுதலானவற்றைத் தர நீங்கள் முன்வரும் வேளையில் அதை ஏற்க எமது இளைஞர்கள் மறுக்கக் கூடும் என்பது.

### கலாநிதி என்.எம் பெரேராவின் கூற்று

இலங்கை சமாசமாஜக் கட்சியின் தலைவர்கள் பலரும் காலத்துக்குக் காலம் பல எதிர்வுகளைக் கூறியிருக்கிறார்கள். கலாநிதி என்.எம்.பெரேரா அவர்கள் எட்டியாந் தோட்டைத் தொகுதிப் நாடாளுமன்ற உறுப்பினராக மிகமிக நீண்ட காலம் பதவி வகித்தவர். அவர் ஒரு சமயம் கூறியதன் சாராம்சம் - எச்சரிக்கை யாதெனில் ''உள்நாட்டுப் பிரச்சினைகளால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய பொருளாதார இழப்புக்களின் பெரும்பங்கைப் பெரும்பான்மை இன மக்கள் என்ற வகையில் சிங்கள மக்களே பகிர்ந்து கொள்ள நேரிடும் என்பது தான்.

### உலக வல்லரசுகளின் தலையீடு

இன்னொரு சமயம் கலாநிதி என்.எம். பெரேரோ அவர்கள் எமது உள்நாட்டு விடயங்களை நாமே பேசித் தீர்த்துக் கொள்வது



எஸ்.ஜே.வி.செல்வநாயகம்

நல்லது. அப்படிநாம் செய்யத் தவறின் உலக வல்லரசுகள் பல எமது பிரச்சினைகளில் தலையிடத் தருணம் பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றன. அதற்கு நாம் இடம் கொடுத்தலாகாது'' என இலங்கை ஆட்சியாளர்களை எச்சரித்திருந்தார்.

### கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா

1956 ஆம் வருடம் ஜூன் மாதம் சிங்களம் மட்டும் மசோதா நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட வேளையில் சமசமாஜக் கட்சித் தலைவர்களின் ஒருவரான கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா அவர்கள் ''இலங்கையின் இரண்டு மொழிகள் என்றால் ஒரு நாடு ஒருமொழி மாத்திரம் தான் என்றால் இரண்டுநாடு'' என்று கூறியது மிகப்பிரசித்திபெற்ற ஒரு கருத்தாகும். அக்காலத்தில் சிங்களத்துடன் தமிழ்மொழிக்கு சமஅந்தஸ்த்து கோரீ தென்னிலங்கையில் போராட்டம் நடத்தியவர்கள் என்ற பெருமையை சமசமாயக்கட்சி தலைவர்களுக்குரியதாகும்.

வரலாற்றில் பல தீர்க்க தரிசனங்களும் எதிர்வு கூறல்களும் உள்ளன. இன்று நாம் அனைவரும் செய்யக்கூடியது இலங்கையின் சமாதானத்திற்காகப் பிரார்த்திப்பது ஒன்று மட்டும்தான். அதைநாம் அனைவரும் செய்வோமாக ஒரு பொல்லாப்பும் இல்லை. தந்தை அவர்கள் கூறியது போன்று ஆண்டவன்தான் தமிழ்மக்களை காப்பாற்ற வேண்டும்.



**செல்லப்பா நடராசா**
(மூத்த பத்திரிகையாளர்)

★

## டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்




குடாநாட்டில் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரனால் மேற்கொள்ளப்பட இருக்கின்ற நடவடிக்கைகள் சம்மந்தமாக 08.12.2007 ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையின் முன்றாம் பக்கத்தில் வெளியிடப்பட்ட அறிக்கை வரவேற்கக்கூடிய ஒன்று.

இது விடயமாகப் பணிப்பாளரால் ஓர் அறிக்கை விடவும் பணிப்புரை வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கவும் மட்டும்தான்முடியும். இவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய கடமை அவரின் கீழ் பணியாற்றும் சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்களையே(PHI) சாரும்.

இன்று குடாநாட்டின் பல பகுதிகளில் பல வருட காலமாகவே பல காணிகள் காடாகவிருப்பதால் இவை சுகாதாரத்திற்குக் கேடாக மட்டுமல்ல பாதுகாப்புக்கே அச்சுறுத்தலாக இருக்கின்றது. இதனால் அயலவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியது சுகாதார சேவை உத்தியோகத்தரின் கடமையல்லவா?

1990ஆம் ஆண்டின் பின் குடாநாட்டில் மலத்தி யோன் என்னும் கிருமிநாசினி அடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. குடாநாட்டில் நுளம்புத் தொல்லையே இல்லை யென்று நினைக்கிறார்கள் போலும். மலேரியா தடுப்புப் பிரிவினர் என்ன செய்கின்றார்கள்? இப்பிரிவு முடப்பட்டுவிட்டதா?

அடுத்து இப்பிரதேசத்தில் உள்ள குடிதண்ணீர் கிணறுகளுக்கு குளோரின் போடப்பட்டு சுத்திகரிக்கப்படவேண்டிய கடமை சுகாதார சேவை உத்தியோகத்தவர்களுடையதே. இவர்கள் எப்போதாவது இச்சேவைகளைச் செய்கின்றார்களா? குடாநாட்டு மக்களில் எத்தனை வீதமானவர்களுக்கு இந்தப் PHI மாரைத்தெரியும்? எப்போதாவது இவர்கள் வீடுகளுக்கோ , வீதிகளுக்கோ சென்று சுகாதார சேவைகளைக் கவனித்துள்ளார்களா? இவர்களின் கடமை என்ன? வாராந்தம் கூட்டத்திற்குப் போவதும், தங்கள் முன்நிகழ்ச்சித்திட்டதை மாதாந்தம் பணிப்பாளருக்குச் சமர்பிப்பதுமா?

ஆகவே டெங்கைக் கட்டுப்படுத்த வெறும் பாதைகளையோ சுவரொட்டிகளையோ அன்றேல், ஒலிபெருக்கி அறிவித்தல்களையோ செய்வதன்மூலம் வெற்றி கண்டிடமுடியாது. சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு வீடு வீடாகவும் வீதிவீதியாகவும் சென்று பொதுமக்களின் ஒத்துழைப்புடன் சுகாதார சீர்கேட்டை இனங்காண்பதன் மூலமே, டெங்கு நோயை மட்டுமல்ல சகல நுளம்புத் தொல்லைகளையும் கட்டுப்படுத்தலாம்.

அரசாங்க ஊழியர்கள் என்பது மக்களின் சேவகர்களே. வெறும் சம்பளம் பெறும் ஊழியர்களாக இருக்கக் கூடாது. மக்களோடு மக்களாக இணைந்து செயற்பட வேண்டும் அப்போது தான் அரசாங்க அதிகாரிகளினால் பணிக்கப்படும் திட்டங்கள் செயல்வடிவம் பெறமுடியும்.

கல்வியங்காடு, நல்லூர்.

## எளிமைக்கும் சேவைக்கும் உதாரணமாகத் திகழ்ந்தவர் அன்னை சாரதாதேவி; இன்று அவரது பிறந்ததினம்



*இன்று உலகில் எங்கும் பதட்டமான நிலை காணப்படுகிறது. பணம், அதிகாரம் படைத்தவர்கள் தாங்கள் நினைத்தபடி நடக்கின்றனர். ஐக்கிய நாடுகளின் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட குறிக்கோளை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியவில்லை. எங்கும் அச்சம், நிம்மதியற்ற தன்மை, அரசியல் லாபம்தான் முக்கியம் என்ற குறிக்கோள்தான் எங்கும் பரவி வருகிறது. மக்களின் அன்றாட வாழ்வியல் உயர்வைப்பற்றி எவரும் ஆழமாகச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. வெளிப்பூச்சுக்கு எல்லாம் நல்லபடியாக இருப்பதாக ஒரு பிரமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

*தூய அன்னை ஸ்ரீசாராதாதேவி ஒரு குக்கிராமத்தில் 1853 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி பிறந்தார். சிறிதேனும் படிப்பு வாசனை கிடையாது. தமது கையெழுத்தைக் கூடச் சரிவரப் போடமாட்டார். ஆனால் பிற்காலத்தில் பல நூல்களை மற்றவர்களைக் கொண்டு வாசிப்பித்துத் தமது அறிவைப் பெருக்கினார் இவரது வாழ்வில் நாம் காணும் நிகழ்ச்சிகள் நம்மை மெய் சிலிர்க்க வைக்கும். இதில் இவரது தாயுள்ளத்துக்கு நிகராக உலகில் வேறு எதுவும் கிடையாது.*

*இவர் ஸ்ரீராம கிருஸ்ணரை மணந்து அவரது மறைவு வரைக்கும் அவருக்கு த்தாயாக இருந்து போற்றினார். ஸ்ரீராமகிருஸ்ணர் தூய அன்னை ஸ்ரீசாராதாதேவியின் ஒப்பற்ற தூய்மையால்தான் தாம் உடல் பற்று நீங்கி பல சாதனைகள் புரிந்தார் என்கிறார்.*

*இவரது வாழ்வில் நாம் கற்க வேண்டிய பாடங்கள் பல. எளிமை, கபடம், சூது வாது தெரியாதவராக எவருக்கும் சேவை செய்வதில் முனைப்பாக இருந்தார். ஒரு நாளும் இவர் எவரிடமும் குறை கண்டதில்லை. காலை 3 மணி தொடக்கம இரவு 11 மணிக்கு நித்திரைக்குச் செல்லும் வரை தனது வாழ்நாளில் கடுமையாக உழைத்துக் கழித்தார். 1920 ஆம் ஆண்டு மறைவுக்கு முன் 3 அல்லது 4 வாரங்கள் மட்டும் அவரால் வேலை செய்ய இயலவில்லை. இன்று உலகில் போலியாக நேரத்தை வீணடிப்பவர்கள் இவரது தினசரி கடமைகளைப் படித்தால் வெட்கப்பட நேரிடும்.*

*படித்தவர், பாமரர், செல்வந்தர், வீடு உடைத்து திருடும் கள்வர்கள், அரசியல் தொண்டர்கள், வாழ்வில் நிலை தவறிய பெண்கள் எல்லாம் அடைக்கலம் புகுந்த இல்லம் தூய அன்னையின் இருப்பிடம். மறைவதற்கு 3 நாள்களுக்கு முன்பு நம் அனைவர்க்கும் ஒரு மாது மூலம் தந்த செய்தியை உன்னிப்பாக அனுஸ்ட்டித்தால் உலகிடை சமாதானம், மனிதநேயம், ஒற்றுமை ஏற்படும் என்பது திண்ணம். அவரது செய்தி இதுவே . 'மகளே உனக்கு மன அமைதி வேண்டில் உலகிடை ஒருவரிடத்தும் குற்றம் காணதே. அதற்கு பதிலாக உன்னுடைய குற்றத்தையே கிளரிப்பார். இந்த உலகில் வேண்டியவர், வேண்டத்தக்கவர் என்று ஒருவரும் கிடையாது. உலகனைத்தும் நமதே''. அன்னையின் திருப் பாதங்களில் இப்புனித தினத்தில் நம் அனைவருக்கும் வழிகாட்டும் படி வேண்டி இறைஞ்சுகின்றோம்.*

**சாராதா தேவியின் அடியவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**இளையதம்பி கந்தசாமி**

தோற்றம் 19 ✱ 11 ✱ 1937

மறைவு 20 ✱ 11 ✱ 2007

திதி: தசமி 30.12.2007

ஐயா!
கதிரவன் உதித்துவிட்டான் என உன் காலடி தேடி வந்த
நாம் உன் இறப்பு காதை எட்டியபோது உள்ளத்தில் விழ்ந்தது இடி
உன் பிரிவால் வாடி நிற்கும் உன் உறவுகளுக்கு ஆறுதல்
கூற நீ வந்த பாதையை ஒரு கணம் திரும்பிப் பாராயோ!
வையகத்தில் பூத்த உன் நினைவுகள் வானத்தை எட்டமுன்
நீ மறைந்தது தான் மாயமோ!
அன்பின் வரைவிலக்கணம் நீயென்று இருந்தோம்
நம்மை இடையில் தவிக்கவிட்டுச் சென்றதுதான் ஏனோ!
நம் உறவின் உயிர் ஊற்றே உன் கிளைகள் வடிக்கும்
கண்ணீரை பார்க்காமல் சென்றதுதான் நியாயமா?
நம் தலைவனை எங்கோ தொலைத்து தளம்புகின்றோம்
இறைவா! உன் அடி சேர்ந்தாரை மீண்டும் வரமாய் தந்து விடு.

தகவல்:
இன்பிலன்,
பொலிகண்டி, வல்வெட்டித்துறை. (ச/54848) **குடும்பத்தினர்.**

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 06 ✱ 12 ✱ 1971



ஆண்டவன் மடியில் 17 ✱ 11 ✱ 2007

**அமரர் கந்தையா கோணேஸ்வரன்**

ஆலமரம் போலிருந்த உமை
அடியோடு சாய்த்தார்களே
புரியாதோர் உமக்களித்த தண்டனையால்
வாடுகிறோம் நாதிங்கு நீயில்லாமல்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (31.12.2007) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

'வாழைத்தோட்டம்',
நவாலி வடக்கு, மானிப்பாய். (ச/54826) **தாய், மனைவி, மகன்.**


**B Sc. in Computer Sc.**

NEW BATCH STARTS ON 05-01-2008

புதிய வருடத்தில் உங்களுடைய தெரிவு B Sc கணனிக் கல்வியாக அமையட்டும்!

வார நாள்களிலும் விரிவுரைகள் ஆரம்பம்

Degree Certificates awarded by
Trinity University (USA Spain) OR
Institution of British Engineers (UK) AND
காமராஜர் பல்கலைக் கழகத்தின் Post Graduate Diploma ஐ ஒரு வருடத்தில் பெறமுடியும்

சர்வதேச அங்கீகாரமுடைய 3 பல்கலைக்கழகங்களுடன் ஒம்முடாக இணையும் அரிய வாய்ப்பு

O/L தகைமையுடன் 2 வருடங்கள்

நீங்கள் ஒரு பட்டதாரியாக இருந்தால் ஒரு வருடத்திலும்

கணனிப் பட்டதாரியாக முடியும்

O/L Batch | Diploma in Office | Diploma in Hardware Eng. | Diploma in DTP

தொடர்புகளுக்கு
Prof. A. Sanmugadas, Administrative Advisor

சங்கானையில்
NORTH LANKA IIT
The Srilankan Center of Trinity University USA
Main Street, Chankanai
060 2214305

யாழ்ப்பாணத்தில்
NEW COLLEGE OF HIGHER STUDIES
No.95, Ariyakulam Junction, Jaffna
Specially for workers

சுழிபுரத்தில்
Near Kaluvan Junction, Chulipuram


## சுகாதார விளம்பரப் பதாகைகள் பொருத்த நடவடிக்கை

குருநகர்,டிசெ.30

வலி.தெற்குப் பகுதியில் உள்ள தெரிவு செய்யப்பட்ட இடங்களில் சுகாதார விளம்பரப்பதாகைகளைப் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மருதனார்மடம், வாழைக்குலைச் சந்தைப் பகுதி, சுன்னாகம் பஸ் நிலையம் ஆகிய இடங்களில் வலி. தெற்குப் பிரதேச சபையினரால் விளம்பரப் பதாகைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தெரி வித்தார். (202-51)

✱ ✱ ✱

குருநகர்,டிசெ.30

டெங்குநோய் ஒழிப்பு விளம்பரப் பதாகைகள் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள சுழிபுரம் சந்தி, வட்டுக்கோட்டை பிரதேச சபை உப அலுவலகம், அராலி கருப்பிட்டி பிள்ளையார் கோயிலடி ஆகிய இடங்களில் வைக்கப்படும் என மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்தது. (202-51)


### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1977, பட்டதாரி ஆசிரியர், ஆயிலியம், 8இல் செவ்வாய், கிரகபாவம் 56¾ உடைய மணமகளுக்கு அரச உத்தியோக மணமகன் தேவை.
விளம்பர இல. 3041, மே/பா உதயன்.

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம்,1980, ரேவதி, Bachelor of Pharmacy பட்டதாரி, கிரகபாவம் 1 உடைய மணப்பெண்ணுக்கு Australiaஇல் PR உள்ள தகுந்த மணமகன் தேவை.
விளம்பர இல. 3042,
மே/பா உதயன்.

### தவறிவிட்டது

மார்க்கண்டு குமாரசுவாமி என்பவரது தேசிய அடையாள அட்டை (440610188V) 14.12.2007 ஆம் திகதி கொக்குவில் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
மா.குமாரசுவாமி,
புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.

### பதவி வெற்றிடம்

எமது நெல்லியடிக்கிளை நிறுவனத்திற்கு கணனி பயிற்றுவிப்பாளர் பதவிக்கான வெற்றிடமுள்ளது. மேற்படி பதவிக்கான நேர்முகப்பரீட்சை 06.01.2008 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தகைமைகள்
✱ வடமராட்சியை வதிவிடமாகக் கொண்டித்தல்.
✱ முன் அனுபவம் விரும்பத்தக்கது.

குறிப்பு: நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிப்போர் தமைமைச் சான்றிதழ்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இயக்குநர்
Insititute of Business Management Studies (IBMS)
N.M.M.V. Road, Neliyady, Karaveddy. (69149)

### மணமகள் தேவை

யாழ்ப்பாணம் இந்து நல்ல, குடும்பப் பின்னணியுள்ள, 1974இல் பிறந்த, சட்டத்தரணி (Lawyer) மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. ஜாதகம் மற்றும் புகைப்படத்துடன் தொடர்புகொள்க.
S.சந்திரராஜா
இல.482, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8609 (ச/54833)

### பாடசாலை வான் சேவை

தெல்லிப்பழையில் இருந்து K.K.S. றோட் ஊடாக கொக்குவிலில் இருந்து சுண்டுக்குளி வரைஉள்ள பாடசாலைகளுக்கான வான் சேவை நடைபெறவுள்ளது.
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
**டிலெக்ஸ் கொமினிகேசன்,**
K.K.S. றோட், சுன்னாகம்.
T.P.: 021 222 3568, 021 222 3569, 060 2212683 (69422)

### ONLY Auto CAD Students
Personal & Visiting Classes

3D-Modeling (Mechanical Drawings)
5 in 1 Punch 3D Home Designing (Civil)
3D-Home Architect (Civil Drawings)

**K.N.Mugunthan (D/A)**
Registered Draughtsman
Mathavady Lane,
Kondavil East, Kondavil.
Tel: 0776055574, 021 4590607
Email: Mugunth1971@yahoo.com


## வாழ்த்துகின்றோம்

**திருமதி வரதலக்ஷ்மி சோமசூரியசிங்கம்**



சமூக சேவைக்கு இலக்கணமாக
திகழ்ந்த வரதாவே!
விவாக, பிறப்பு - இறப்பு
பதிவாளராக
நியமனம் பெற்றுள்ள உம்மை
எப்படி நாம் வாழ்த்தினாலும்
மிகையாகாது
கொக்குவில் - கோண்டாவில்
மண்மீது உம் சேவை
தொடர்ந்திட
பிள்ளையார், அம்பாள் ஆசியுடன்
வாயார வாழ்த்துகின்றோம்.

கோண்டாவில் மேற்கு. (69496) திரு.திருமதி இ.நடராசா பகுதி.


### SATHEES TRAVEL AGENCY
### உடனடி வேலைவாய்ப்பு

**DOHA QATAR**
✱ காப்பென்ரர்
✱ மேசன்
✱ எலக்ரிசன்
✱ A/C மெக்கானிக்
✱ சற்றிங் காப்பென்ரர்
✱ ஜெனரல் லேபர் (கூலி)

**SAUDI ARABIA**
✱ பாதுகாவலர் (Security)
✱ A/C மெக்கானிக்
✱ ஜெனரல் லேபர்

தொடர்பு:
K. சதீஸ்,
உடுவில் வீதி, மானிப்பாய்.

E-mail:- sathees agency @ hotmail.com
Regd No: VSW/FIN/BR/936/1-2004
T.P: 021 4591625, 0776138942. (69485)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
**குமாரசாமி நந்தகுமார்**
அவர்களின் அன்புச் சகோதரன்
**குமாரசாமி ஸ்ரீகுமார்**

அவர்கள் 24.12.2007 அன்று இந்தோனேசியாவில் நடந்த விபத்தில் மரணம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சூடரியன் அ.த.க.பாடசாலை,
வாணி. (69502) **பாடசாலைச் சமூகம்.**

## பதினெட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**நடராஜா சந்திரராஜா** (போஸ்)
(முன்னாள் நுகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், சுலவாக்கலை)

மண்ணில் 26 ✱ 02 ✱ 1948

விண்ணில் 19 ✱ 12 ✱ 1989

திதி: 30.12.2007

ஆண்டுகள் பதினெட்டாகியும் நீங்கா நினைவிலிருப்பவரே!
அகிலத்தில் நாம் வாழ வாணிபம் செய்தவரே!
அமராகி எம் இதய தெய்வமானவரே!
அரனருளால் தங்கள் ஆத்மா என்றும் சாந்தியடையட்டும்.

பலாலி வீதி,
கோண்டாவில். (69476)
என்றும் உங்கள் நினைவுடன்:
**மனைவி, பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்



**திருமதி செல்வலிங்கம் கருணாநிதி**

அம்பனை, தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கருணாநிதி (கருணா, பவா) 24.12.2007 திங்களன்று லண்டனில் காலமானார்.

அன்னார் செல்வலிங்கத்தின் அன்பு மனைவியும், சின்னத்தம்பி (இருபாலை)- பசுபதி தம்பதியரின் புதல்வியும், உரும்பிராய் மடத்தடியைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னுத்துரை-சின்னத்தங்கச்சி தம்பதியரின் மருமகளும், மேனகா, ரவிச்சந்திரன் (ஐஸ்வர்யா கொமினிகேசன் - ஆனைக்கோட்டை), மகேந்திரன் (சுவிஸ்), பாலேந்திரன், அமுதா (கனடா), சியாமளா (சுவிஸ்), ரேணுகா (லண்டன்), ரகுலேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மகுலசிங்கம் (மாகாண உள்ளக கணக்காய்வு திணைக்களம், யாழ்ப்பாணம்), சத்தியானந்தாதேவி (ஆசிரியை, யா/ஆனைக்கோட்டை றோ.க.பாடசாலை), சாந்தி (சுவிஸ்), பவானி, ரவீந்திரன் (கனடா), பாலச்சந்திரன் (சுவிஸ்), ஜெயசுதன் (லண்டன்), கலாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2007) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3மணிக்கு (லண்டன் நேரப்படி) லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
பாடசாலை வீதி,
ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. ஏ.தர்மகுலசிங்கம் (மைத்துனர்). (69503)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாவற்குழியூர் நடராஜன் ஈழத்தின் புகழ்பூத்த கவிஞர்களில் ஒருவர். அத்தோடு மறுமலர்ச்சிக் காலச் சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவரும் ஆவார். ஈழகேசரியில் அவர் எழுதிய நான்கு சிறு கதைகளில் "மாமி"யும் ஒன்றாகும். அவர் இலங்கை வானொலியின் தமிழ்ப் பிரிவின் பிரதம அதிகாரியாகப் பணிபுரிந்தவர்.

# மாமி

"இவங்கள் கொடுக்கிற இடம்தானே இதெல்லாம். நாலு மணியாய் விட்டால் போதும். ''டாங்கு டீங்'' கென்று சோடித்துக் கொண்டு நாட்டியக்காரிகள் மாதிரிக் கிளம்பிவிடுகிறார்கள். புருஷன் என்று ஒருவன் இருக்கிறானே: அவன் 'ஆபீசால்' வேர்த்துக் களைத்து வரும் பொழுது கொஞ்சங் கோப்பியைக் 'கீப்பி'யைக் கொடுத்து..... சிச்சிச்சீ, அந்த நினைவே கிடையாது. என்ன பிறவிகளடி இது! என்று இரைந்து கொண்டு குசினிக்கும் கூடத்துக்குமாக நடந்துகொண்டிருந்தாள் தங்கம்மா.

'ஆம், ஆம்' என்று சொல்லுவது போல மணியும் 'டாங்..... டாங்' என்று நாலு அடித்தது.

அப்பொழுதெல்லாம் உள்ளே நின்று அந்த மாதிரியாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்த கமலாவுக்குச் 'சுளீர், சுளீர்' என்று ஏதோ உடம்பெல்லாம் ஏறிற்று.

என்ன செய்வது? கல்யாணமாகி இரண்டு வருஷங்களாவது போயிருந்தால் 'திடீர் திடீர்' என்று தக்க பதில் கொடுக்க அவளும் பழகித்தானிருப்பாள் ஆனால், அப்படியெல்லாம் 'சட்டென்று விழ' இன்னும் அவள் தெரிந்து கொள்ளவில்லை. எப்படியென்றாலும், ஏதோ ஒன்று உள்ளே கிடந்து வெந்து வெடித்துக் கொண்டிருந்தது அவளுக்கு. என்னவோ வெளியே மட்டும் வரவில்லை.

''ஒரு புருஷனுக்குப் பெண் என்று வந்து விட்டார்கள்! இந்தச் சோடினைக்காரிகள் வந்துவிட்டால், பெற்ற தாய் என்றிருப்பவள் மகனைப் பார்க்கமாட்டாளாக்கும். கொடிக்குச்சுரைக்காய் பாரமாய் விடுமா என்ன? என்று மேலும் சீறியடித்துக் கொண்டு, அங்கும் இங்குமாக நடந்து, அடுப்பில் எதையோ பார்ப்பதும், அறையில் கமலா செய்யும் கோலாகலத்தைக் கூடத்தில் இருந்து பார்த்து எரிவதுமாக இருந்தாள் தங்கம்மா.

முகத்தைச் சுழித்துக் கொண்டு, கூடப் பக்கத்துச் சுவரைப் பார்த்துத் தலையை ஒரு ஏளன அசைப்பு அசைத்துவிட்டு, கொண்டை மாலை சரியாக அமைந்திருக்கிறதா என்று கழுத்தைத் திருப்பித் திருப்பிக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருந்தாள் கமலா.

மீண்டும் தங்கம்மாளின் குரல் தான் "இல்லை இ.... புருஷர்களுக்கு இவர்கள் என்ன தான் பிரமாதமாகப் பண்ணி விடுகிறார்கள் என்று கேட்கிறேன். இராமுழுவதும் ''குசுகுசு'' வென்று கூடிக் கதைத்துத் தூக்கத்தைக் கெடுப்பதும், பகல் முழுவதும் ''ஆபீசிலிருந்து'' களைத்து வருகிறவனை ஒரு நிமிட நேரம் ஓய விடாமல் ''சினிமா''வுக்கு வா', அதுக்கு வா, இதுக்கு வா என்று அரித்தரித்து இருக்க விடாமல் வீதிக்கு வீதி இழுத்துக் கொண்டு திரிவதும்தானே!''

இவ்வளவு வார்த்தைகளையெல்லாம் கேட்டுக் கேட்டு, ''அவர் வரட்டும் இன்றைக்கு: அவர் வரட்டும்'' என்று பொருமிக் கொண்டிருந்தது, கமலாவின் மனம்.

''என்னடி இது!'' என்று முகத்தை ஒரு திருப்புத் திருப்பிக், கொஞ்சநேரம் நாடியில் கையைவைத்துக் கொண்டிருந்துவிட்டு, ''அம்மா அம்மா'' என்று தாயிடம் கன்று போல வருகிற பிள்ளை. இப்பொழுது........ அதை ஏன் பேசுவான். ஒருத்தி கையில் கொடுத்தோமே! வீதி வீதியாக இழுபட்டுத் திரிகிறது. உண்ண நேரமோ, உறங்க நேரமோ....'' பொருமிக் கொண்டே கூறினாள், கூடத்தில் இருந்து. ''அவவுக்கு என்னவாக்கும்'' என்று கேட்பது போல வேகமாகத் துடித்தன கமலாவின் உதடுகள்.

* * *

'டக்... டக்' என்று வாசற்படியில் சிலிப்பர் சத்தம் கேட்டது. மேசைக் கண்ணாடி முன் நின்று கொண்டிருந்த கமலா, அப்படியே தாவிப் படுக்கையில் மெதுவாக இருந்து தன்னுடைய தலையணையில்போட்டு நெற்றியை அதன் மேல் வைத்து அழுத்திக் கொண்டாள்.

''என்ன இது?'' என்று கமலாவைப் பார்த்துக் கொண்டே 'கோற்' றைக் கழற்றினான் சுந்தரன்.

''இஞ்சாரும்! இதென்ன இது?'' என்று பக்கத்தில் அமர்ந்து கெஞ்சலாகக் கேட்டான், அவள் தலையைத் தடவித் தடவி.

தலையைக் குழப்பிவிடப்போகிறானே என்றோ என்னவோ, 'சுறுக்'கென்று தலையை ஒரு புறமாக இழுத்துக் கொண்டு ''உங்கள் அம்மாவைத் தான் கேளுங்கள். அவவுக்குத் தானே எல்லாம் தெரியும்; எனக்கு என்ன தெரியப்போகிறது?'' என்று விம்மி விம்மிச் சொன்னாள்.

''அம்மாவைக் கேட்கத் தெரியாமலா உம்மைக் கேட்கிறேன்? அவளின் குணம் தான்..''.

''உங்களுக்குத் தங்கமாகப் பிடிக்குமே!'' ''எனக்குத் தெரியுமே, நான் சொல்வதற்கு எதிராகத் தான் சொல்வீர் என்று''.

''ஆம் ஆம்; நான் எதிராகத் தான் சொல்லுவேன். எங்கள் அம்மா என்றால்...''

''அதை எல்லாம் ஆர் கேட்டது? என்ன இப்படி வாடிப் போய் இருக்கிறீரே என்று கேட்டால்...''

''இந்த மாமி என்று இருக்கிறவாகளோடு இருக்கமுடியாது, முடியாது என்று சொன்னால்...''

''மாமிக்கு என்னவாம்?'' என்று கேட்டுக் கொண்டே சமையற் கட்டிலிருந்து வந்தாள் தங்கம்மாள்.

''என்னம்மா? 'எனக்கு மட்டும் ஒரு மருமகள் வந்தால் என்ன மாதிரிப் பார்ப்பேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தீர்களே, அடுத்த வீட்டு மாமி மருமகளைப் படுத்துகிற பாட்டைப் பார்த்து''

''அதுக்கு இப்ப என்ன வந்துவிட்டது? இப்படி 'ஆபீ' சால் வந்ததும் வராததுமாக, உள்ளதும் இல்லாததும் சொல்லி - நான் தான் சொன்னேனே- தாய்க்கும் பிள்ளைக்கும் இருக்கிற அன்பை கெடுத்துப்போடுவாள் ஒருத்தி வந்தால், என்று''.

''கெடுத்துப் போடாமல் உங்கள் மகனை நீங்களே வைத்துக் கொண்டிருக்கிறது தானே!''

''வைத்துக் கொண்டிராமல் என்னடி...''

''அம்மா! போதும், போதும். நீங்கள் மட்டும் என்னவோ விதிவிலக்கான மாமியாக அமையப் போகிறீர்களாக்கும் என்று தான் பிரமாதமாக எண்ணிக் கொண்டிருந்தேன். எப்படி என்றாலும் மாமி மாமி தான் - இஞ்சாரும்! காட்சிக்கு நேரமாகிறது; வாரும்'' என்று கமலாவின் கையைப் பிடித்து இழுத்தான்.

அவளும், ஊடல் தணித்து இணங்கியவளாய் எழுந்து பின் சென்றாள், கடைக் கண்ணால் மாமியை ஒரு மின்வெட்டுப் பார்வை பார்த்துவிட்டு.

* * *

''பிள்ளைகளைப் பெற்று வளவுமன்'' என்றாள் தங்கம்மாள், ஒரு ஏக்கம் நிறைந்த குரலில்; தன் மகன் தன் பக்கத்துக்குப் பேசவில்லையே என்ற ஆத்திரத்தினால் போலும். *

ஜெயமோகன் தமிழிலும் மலையாளத்திலும் எழுதும் முக்கிய படைப்பாளி. சிறுகதை, நாவல், கட்டுரை, விமர்சனம் எனப் பல தளங்களில் இயங்கும் ஜெயமோகன் ஈழத்து இலக்கியம் தொடர்பான ஆழ்ந்த அக்கறையுடையவர். இவை கேரள இஸ்லாமிய இதழான 'மாத்யமம்' இதழ்களில் மலையாள மொழிகளில் தொடராக எழுதப்பட்டு, பின்னர் ஆனந்த விகடனில் தமிழில் எழுதப்பட்டவையாகும். பின்னர் "சங்கச் சித்திரங்கள்" என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டது. அவரது விஷ்ணுபுரம் நாவல் போல அதிக கவனிப்புக்கு உட்பட்ட சங்கச் சித்திரங்கள் நூலிலிருந்து இக் கட்டுரையை உதயன் வாசகர்களுக்குத் தருகின்றோம்.

# மலரும் உதிரமும்...

*செங்களம் படக்கொன்று அவுணர் தேய்த்த*
*செங்கோல் அம்பில் செங்கோட்டு யானைக்*
*கழல் தொடிச் சேஎய் குன்றம்*
*குருதிப் பூவின் குலைக்காந் தட்டே*

*கனடாவில் டொரென்டோ நகரிலிருந்து முந்நூறு கிலோ மீற்றர் தொலைவில் (கனடாவில் கார் வேகத்தை வைத்து இதை அருகே என்று சொல்ல வேண்டும்). அல்கான் க்வின் என்ற தேசியவனம் இருக்கிறது. கனடாவின் தேசிய மரமான மேப்பிள் மரங்கள் நிரம்பிய இக்காடு உலகமெங்குமிருக்கும் பயணிகளை கவரும் ஓர் அற்புதம். அது ஒக்டோபர் மாத காலத்தில் செம்பிழம்பால் ஆனதாகக் காணப்படும்.*

*மேப்பிள் மரங்கள் நம்முர் புங்கமரங்களைப் போல. இலை வடிவமும் கிட்டத்தட்ட அப்படித்தான். புங்க மரங்களைப்போலவே இவையும் ஒக்டோபர் இறுதியில் இலையுதிர்கின்றன. குளிர்காலம் முடிந்ததும் துளிர்கின்றன. ஆனால், மேப்பிள் மரங்களின் இலைகள் உதிர்வதற்கு முன்பாக மெதுவாகப் பழுப்பு நிறம் கொள்கின்றன. பொன்மஞ்சள், தீச் சிவப்பு, செம்புச்சிவப்பு என நிறங்கள் மாறிப் பழுத்து உதிர்கின்றன. அல்கான் க்வின் வனத்துக்கு எழுத்தாள நண்பர் அ. முத்துலிங்கம் என்னை அழைத்துச் சென்றபோது ஒக்டோபர் பழுப்பில், காலையிளம் வெயிலில், காடு தீப் பற்றி எரிவது போல இருந்தது. ஒருசில கணங்களுக்குள் கண்களுக்குள்ளும் கற்பனையிலும் அக்கினியை நிரப்பும் உக்கிரமான தழலாட்டம்.*

*தீயின் நிறமென்ன என்று சொல்லி விட முடியுமா? தீ ஒரு பொருளல்ல. ஒரு நிகழ்வு. தமிழில் அதற்கு எரி என்று பெயர். எரிவதோ எரி. எரிதலென்னும் செயல் மட்டுமே அது. எரிதலின், அதன் ஒளியின், எல்லாத் தோற்றங்களையும் சொல்லித்தான் தீயை வர்ணிக்க முடியும். ஆனால், தீ என்பது ஒரு புற நிகழ்வு மட்டும் தானா? எரியும் தீயைப் பார்க்கும் போது நம் எண்ணங்களிலும் கற்பனையிலும் எரிகிறதே ஒரு தீ. அதையும் சேர்க்காமல் சொன்னால் அது தீயின் வடிவமாகி விடுமா என்ன? சாம வேதத்தில் ஆக்னேய காண்டம் எந்த கவிதை வாசகனும் வாசித்தாக வேண்டிய மகத்தான வரிகள் அடங்கியது. (தமிழில் ஜம்புநாதன் மொழிபெயர்ப்பில் வேதங்கள் முழுமையாக வெளிவந்துள்ளன). தீ அதன் அத்தனை தோற்றங்களுடனும் மொழியின் நுனியில் பற்றிக் கொண்டு படர்ந்தேறுகிறது. அதில் சிந்தனைகளால் சிறகடிக்கப்படாத ஆதிமனம் தன் தூய கற்பனையால் பிரபஞ்ச சார மான தீயை அள்ளியெடுத்துவிட முயல்கிறது.*

*தீயை பிரபஞ்சத்தின் உயிர் என அறிந்தன வேதங்கள். மண்ணிலும் விண்ணிலும் பருப் பொருளிலும் இன்மையிலும் அதுவே நிரம்பியுள்ளது. அது சக்தியின் காட்சி வடிவம். இந்த மரங்களின் உள்ளே உறங்கிய செந்நெருப்புத்தான் இவ்வாறு வெளியேவருகிறதா என்ன? அப்படியானால் குளிர்ந்த தளிரில், மெல்லிய மலரிதழ்களில் எல்லாம் தீதான் ஒளிந்திருக்கிறதா? மனித உட லிலும் தீ எரிகிறதா? ரத்த மென்பது அதன் தழலாட்டம் தானா? ஒரு கணம் நிணம் சிதறிய பெரும் போர்க் களம் போல அல்கான் க்வின் செவ்வனம் எனக்குப் பிரமை தந்தது.*

*எத்தனை அபத்தமான சிந்தனை... ஆனால், அடிப்படையான விஷயங்களைப் பற்றி அப்படித்தான் யோசிக்க முடியும். தர்க்கபூர்வமாக யோசிக்கும்போது அபத்தமாக இருப்பதே கவித்துவ உண்மையாகும். தர்க்கமற்ற ஆழ் நிலையில் அவை நம்மிடம் பேசுகின்றன. ஆன்மீக உண்மைகளெல்லாமே கவிதையின் மொழிலேயே அமைந்துள்ளன.*

*இதற்கென கவிதை கண்டடைந்த உத்தியே படிமம் (Poetic image) கவித்துவப் படிமம் இல்லாமல் எந்த மனிதருமே அன்றாட வாழ்க்கையில் கூட உரையாடிவிட முடியாது. 'வயிற்றில் பாலை வார்த்தது போல...' என்கின்றோம். 'நெருப்பைக் கட்டிட்டு இருக்கிறேன்' என்கிறோம். இன்றைய கவிதை யில் இவற்றைப் படிமம் என்று சொல்லும். பண்டைய கவிதையில் இதை அலங்காரம் அல்லது அணி என்று சொல்லும். அடிப்ப டையில் இரண்டுக்கும் வித் தியாசமே இல்லை. ஆனால், பண்டைப் புலவர் அணிகளை மிதமிஞ்சி விளக்கியும், இலக்கணம் வகுத்தும் நமக்குக் கற்பனை செய்ய வாய்ப்பே இல்லாமல் செய்து விட்டிருக் கின்றனர். படிமம் வாசகனின் கற்பனை மூலமே விரிந்து முழுமை கொள்ளமுடியும். என் நண்பர் ஒருவர் சொன்னது போல படிமம் காதலியின் கடைக்கண் வீச்சு. அதற்கு இலக் காகிறவனின் மனதிலேயே அது முளைத்து, கிளை விட்டு, காடாகி, பூத்து மண்ட முடியும். பூமணத்தால் [illegible] முடியும்.*

*இலக்கணங்களும் விளக்கங்களும் மறைப்பதனாலேயே நவீன வாசகன் பழைய கவிதைகளை அந்நியமாக உணர்கின்றான். தனக்குக் கற்பனை செய்யவோ, கண்டடையவோ அவற்றில் ஏதுமில்லை என்று எண்ணுகின்றான். உரைவிளக்கங்கள், இலக்கணங்களை முற்றிலுமாகத் தவிர்த்து விட்டு, தன் வாழ்க்கை அனுபவங்களையும் கற்பனைகளையும் மட்டும் அடிப்படையாகக் கொண்டு அவன் இக் கவிதைகளை அணுக வேண்டும். கவிதையின் அசல் வரிகளை மட்டுமே எடுத்துக்கொண்டால் போதும். அவற்றுடன் உள்ள துறைக்குறிப் புகள் போன்றவைகூடத் தேவை இல்லை. அவை பழையகால வாசிப்பினைச் சார்ந்தவை. கவிதைக்குக் காலமில்லை. வாசிப்பு மட்டுமே காலம் சார்ந்தது. ஆகவே காலம் சார்ந்து எக் கவிதைக்கும் சலுகையோ முக்கியத்துவமோ தரவேண்டிய அவசியமில்லை.*

*சங்ககாலக் கவிதைகளை, சமகால நவீனக் கவிதைகளை எப்படிவாசிக்கின்றோமோ அப்படி வாசிப்பதே நல்லது. அப்போது ஒன்று தெரியும், சங்ககாலக் கவிதைகள் இன்றைய நவீனக் கவிதைகளைவிட இறுக்கமானகவிதை மொழிஉடையவை. மேலும்நுட்பமான மௌனங்கள் கொண்டவை. நவீன புரியவில்லை என்பவர்கள், சங்கக் கவிதைகளை மட்டும் எப்படிப் புரிந்து கொள்கிறார்கள்? கவனித்துப் பாருங்கள். அவர்கள் சங்கக்கவிதைகளையல்ல, அவற்றின் உரைகளைத்தான் வாசிக்கிறார்கள்.*

# இலக்கியப் பொழில்

*கவிதை எப்போதுமே ஒன்றுதான். பண்டைய கவிதைகளில் வெறும் வர்ணனைகளாகவோ அணியலங்காரங்களாக்வோ நாம் கண்டு வருபவை. உண்மையில் உக்கிரமான படிமங்களாக இருக்கக்கூடும். படிமம் எப்போதும் முதலில் கண்ணில் விரியும் ஒரு காட்சி. பிறகு அது கனவு. பிறகு அதன் மீது அர்த்தங்கள் முடிவே இல்லாமல் பெருக்கெடுக்கின்றன. கவிஞன் கண்டதும், காணாததுமான அர்த்தங்கள்! காலம்தோறும் வளரும் அர்த்தங்கள். காரணம், படிமங்களை கவிஞன் ஒரு கலாசாரத்தின் பொதுவான ஆழத்திலிருந்து தான் கண்டடைகிறான். அந்தப் படிமம் அவனையும் மீறிய ஒன்று. சிற்பி செதுக்கியதுதான் தெய்வச் சிலை. ஆனால், தெய்வம் அவனுக் குக் கட்டுப் பட்டதல்ல. அவனும் வணங்கும் பிரமாண்டம். அது, ஒரு கனவு முடிவின்றி அர்த்தம் சொல்லிக் கொண்டேயிருக்கலாம்.*




*வரிகளெங்கம் செம்மை தகதகக்கும் இக் கவிதையை உலகக் கவிதை மரபின் மிகச் சிறந்த கவிப் படிமங்களில் ஒன்றாக முன்வைப்பேன்.*

**சிவந்த போர்க்களத்தில்**
**கொன்று வீழ்த்தப்பட்ட**
**அசுரர்களின் உதிரம் தோய்ந்துச்**
**சிவந்த அம்பும்,**
**ரத்தத்தால் சிவந்த**
**தந்தங்களுள்ள யானையும்,**
**செங்கழலணிந்த கால்களும்**
**கொண்ட**
**செவ்வேளின் குன்று**
**குருதிநிற மலர்க் கொத்துக்களால்**
**நிரம்பியது.**

*தலைவன், தந்த காந்தள் மலரை மறுக் கும் பொருட்டு தலைவி சொன்னது இது என்கிறது துறைக்குறிப்பு. அதே சமயம் தலைவன் வரவை உணர்ந்த தோழி, மலர் கொய்யச் செல்வதற்காகச் சொல்லி நீங்குவது இது என்று நச்சினார்க்கினியர் உரை எழுதுகிறார். இவை ஒருவகை வாசிப்புகள் மட்டுமே. கவிதை வரிகளுக்கும் இவற்றுக்கும் நேரடிஉறவில்லை. எவ்விதமான வாசிப்புக்கும் இடம்கொடுக்கும் துல்லியமான படிமம் மட்டுமே இதிலுள்ளது.*

*இக்கவிதையில் உள்ளது ஒரு மனக்காட்சி. சிவந்த மலர்கள் நிரம்பிய போர்க்களம் ரத்தம் சிதறிய போர்க்களமாகத் தெரிகிறது. அந்த மனநிலை என்ன? கூடலின் குறியீடான குறிஞ்சி நிலத்தின் கடவுளான முருகன். அந்நிலையில் அசுரரின் ரத்தத்தால் சிவந்த சூல்-அணிந்து நிற்பவனாகத் தோற்றம் தருகின்றான். ஏன்?*

*அதற்கான காரணம் இக்கவிதையில் சொல்லப்படவில்லை. அதை நமது வாழ்க்கை அனுபவங்களில்தான் தேட வேண்டும்.* *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளின் காவல்துறைக்கு புதிய பொறுப்பாளராக இளங்கோ நியமனம்



கிளிநொச்சி,டிசெ.30

விடுதலைப் புலிகளின் தமிழீழக் காவல் துறையின் புதிய பொறுப்பாளராக கே. இளங்கோ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

தமிழீழ காவல் துறை உருவாக்கப்பட்ட காலத்தில் இருந்து கடந்த மாதம் 2ஆம் திகதிவரை பா. நடேசன் அப்பதவியினை வகித்து வந்தார். அரச விமானப் படையின் குண்டுத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் களப்பலியான பின் அவரின் வெற்றிடத்திற்கு காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் அரசியல் துறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னர் காவல்துறையின் பொறுப்பாளர் வெற்றிடத்திற்கு கே. இளங்கோ 19.12.2007 அன்று முதல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் தலைவரால் கடந்த 16 வருடங்களுக்கு முன்னர் தமிழீழ காவல்துறை உருவாக்கப்பட்டது.

இத்துறை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சட்டம், ஒழுங்கை நிலை நாட்டி தனது சேவையை சிறப்பாக ஆற்றி வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா சிவபாதசுந்தரமூர்த்தி



**(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)**

மாவிட்டபுரம் வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகவும், தற்போது கற்புலம்வீதி உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவபாதசுந்தரமூர்த்தி (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) 28.12.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் கௌரிமனோகரி (ஆசிரியை யா/வசாவிளான் ம.ம.வி.) வசந்தகௌரி (ஆசிரியர் யா/வசாவிளான் ம.ம.வி.), சிவானந்தகௌரி (ஹொலன்ட்), சிவனேசகௌரி (கனடா), சிவபாலகௌரி (லண்டன்), சிவஞானகௌரி (ஜேர்மனி), இராஜமார்த்தாண்டமூர்த்தி (கண்ணன் - லண்டன்), வீரமார்த்தாண்டமூர்த்தி (பாரதி - கனடா), காலஞ்சென்ற ஞானபாஸ்கரமூர்த்தி (ஆதித்தன்), ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீதரன், விக்னேஸ்வரன் (ஆசிரியர் யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்), செல்வகுமார் (ஹொலன்ட்), குகனேசன் (கனடா), ரதிகரன் (லண்டன்), சந்திரதாஸ் (ஜேர்மனி), ஜெயசுதா (பிரான்ஸ்), வித்தியமாலா (கனடா) ஆகியோரின் மாமனும் திருஞானசம்பந்தமூர்த்தி (லண்டன்) காலஞ்சென்ற இராசலட்சுமி, கனகாம்பிகை (கனடா), நகுலாம்பிகை (கொழும்பு), குருமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரண்ஞன், தனஞ்சயன், சாருண்யன், ரிஷிகேசன், மதுராங்கன், செல்வா, அருந்தா (ஹொலன்), சுவர்ணலதா (கனடா), ரவீஷ், ரவித்தா (லண்டன்), சஞ்சிகா, சஞ்சுதன், சுபாஷிகா (ஜேர்மனி), அபினயா, அகல்யா (பிரான்ஸ்), விதுஷ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பிள்ளைகள்: கௌரி மனோகரி ஸ்ரீதரன், வசந்தகௌரி விக்னேஸ்வர்.

*கற்புலம் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*
*தொ.பே 222 5588*

(68510)

### திருமதி இராமநாதன் கனகாம்பிகை



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமநாதன் கனகாம்பிகை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதன் (யா/செயலகம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இளங்கோவன் மற்றும் சடகோபன் (இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை) காலஞ்சென்ற அருந்ததி மற்றும் நந்தகோவன் (லண்டன்), ரேவதி, பத்மாவதி (கனடா), கமலாவதி (பிரான்ஸ்), புஸ்பாவதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற பரமநாதன் (குலம்) மற்றும் கமலாதேவி, கோகிலாதேவி, கருணாகரன், சோதிராசா, ஜெயந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (30.12.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*12/2, கனகரத்தினம் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

தகவல்:
**இ.சடகோபன்** *(மகன்).*

## தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.30

அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை வழங்கி வருகின்றனர்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் ஏற்பட்ட அனர்த்தத்தின் போது இடம்பெயர்ந்து மீளக்குயேறிய குடும்பங்களுக்கே பாய், லாம்பு, படுக்கைவிரிப்பு, நுளம்புவலை ஆகிய பொருள்களை வழங்கி வருகின்றனர். கடந்த வியாழக்கிழமை அல்லாரை கிராம அலுவலர் பிரிவில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன. (202-207)

## மருத்துவமுகாம்

அச்சுவேலி லயன்ஸ் கழகமும் உரும்பிராய் லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் மருத்துவமுகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நோய்கள் தொடர்பான பரிசோதனைகள், அதற்கான ஆலோசனைகள் உள்ளிட்ட மருத்துவ செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவிருப்பதால் உரும்பிராய், ஊரெழு பகுதிமக்கள் மருத்துவமுகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு உரும்பிராய் - அச்சுவேலி லயன்ஸ் கழகங்கள் கேட்டுள்ளன. (202-11)

## தவறிவிட்டது

இல.5, பாரதி வீதி, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மயில்வாகனம் ரவிச்சந்திரன் என்பவருடைய மோட்டார்சைக்கிள் ஆவணங்கள், முச்சக்கரவண்டி ஆவணங்கள் என்பன கைலாசபிள்ளையார் கோயிலுக்கும் சொக்கர் கடைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். *ரவி ரெயிலரிங், மின்சார நிலைய வீதி, பெரிய கடை, யாழ்ப்பாணம்.*


சகலவிதமான
றிச்சார்ட் பாடசாலை அலுவலக உபகரணங்கள்

* கண்கவர் வர்ணங்களில்
* அழகிய அட்டைப் படங்களுடன்
* மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்.விநியோகத்தர்:
KAJAN ENTERPRISE
Ramalingam Road, Mudamavady,
Thirunelvely.
021 222 6678, 0777 550886, 077 4055154

Richard®
Quality Stationery


## இலவச வாழ்வாதாரப் பயிற்சிகள்

**யேசு சபை அகதிகள் பணி (JRS) நிறுவனத்தினர் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை கல்வியை இடைநிறுத்திய, மேற்கொண்டு கல்வியை தொடர முடியாத, வறிய பெண்களுக்கு இலவச வாழ்வாதாரப் பயிற்சியினை ஆரம்பிக்கவுள்ளனர்.**

தையல், ஐசிங், சிகை அலங்கரிப்பு, பன்ன வேலை, வர்ணப்பூச்சு ஆகியவற்றுடன் உளவியல் மற்றும் தலைமைத்துவம் ஆகிய பயிற்சிகள் வழங்கப்படும்.

18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட திருமணமாகாத பெண்கள் எதிர்வரும் 2008 ஜனவரி ஐந்தாம் திகதிக்கு முன்னர் சுயவிவரங்களை உள்ளடக்கிய விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

கடித உறையின் இடதுபக்க மூலையில் **"இலவச வாழ்வாதாரப் பயிற்சி"** எனக் குறிப்பிடவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
*பங்குத்தந்தை*
**புனித லிகோரியார் ஆலயம்**
**கச்சாய் வீதி, சாவகச்சேரி.**

(சி/54852)


**எல்.ஐ.சி.(லங்கா) லிமிட்**
2008 ஆம் ஆண்டின் காப்புறுதி ஆலோசகர்களுக்கான
நேர்முகத்தேர்வு

*திகதி* : **01/02மற்றும் 3ஆம்திகதிகளில் ஜனவரி 2008**
*நேரம்* : **முற்பகல் 9 முதல் 12 மணிவரை**

*உலகின் 20 நாடுகளில் 22 கோடி வாடிக்கையாளர்களைக் கொண்டிருக்கும் முதன்மை ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையில் பணியாற்ற தகுதிகாண் நபர்களை நேர்முகத்தேர்வுக்கு அழைக்கின்றோம்.*

"நீங்களும் ஒரு சாதனையாளர் ஆவீர்கள் என நினைத்தால் உங்களுக்கு இன்று நாம் சந்தர்ப்பம் தருகின்றோம்"

**அடிப்படைத் தகுதி**

* 18 வயதைக் கடந்த ஆண், பெண் இருபாலரும்
* க.பொ.த. (சா/த) தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி.
* ஒழுக்கமும், நேர்மையும் தன்னம்பிக்கையும் தங்களின் நேரம் தவறாத வருகையும் உடை சீர்நிலையும் அவதானிக்கப்படும்.

இடம்:- L.I.C லங்கா லிமிட்
இல.55 R.G.கட்டடம்
கன்னாதிட்டி சந்தி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல 222 6325/6326

*முகாமையாளர்*
**LIC லங்கா லிமிட்**
**யாழ்ப்பாணம்.**

(69512)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
**அழகரத்தினம் பத்மநாதன்**
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி**
**வள்ளிப்பிள்ளை அழகரத்தினம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
**நீர்வேலி.** (69506) **யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்.**


CANADA LONDON USA EU
அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில பாடநெறிகள்
5th Anniversary
சிறார்களுக்கு...
PRE FOUNDATION - படிப்படியாக ஆங்கில
FOUNDATION - அறிவை விருத்தி செய்யும்
LEVEL 1,2,3,4 - 6 மாத கால பாடநெறிகள்
G.C.E. (O/L), G.C.E. (A/L) கற்றோருக்கு...
IELTS - வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு
DIPLOMA IN ENGLISH - வெளிநாடு/உள்நாடு தொழில் வாய்ப்புகளுக்கு
CERTIFICATE IN ENGLISH - சரளமாகஆங்கிலம் பேசுவதற்கு
BRITISH BUSINESS SCHOOL
140, TEMPLE ROAD, JAFFNA. Tel: 021 222 5796


We Serve

**கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளை**
*அனுசரணையுடன்*
**மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்** நடத்தும்
விழி வெண்படலம் பாதிப்புற்றோரை இனங்கண்டு சிகிச்சை அளிப்பதற்கான
**கண்பரிசோதனை முகாம்**

*காலம்:* **30.12.2007 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2மணி**
*இடம்:* **மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை.**

கண்பரிசோதனைகள் மேற்கொள்பவர் கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி S.குகதாசன் (யாழ் போதனா வைத்தியசாலை). இம்முகாமில் பயனாளிகள் குறித்த நேரத்திற்கு சமூகமளித்து பயன்பெறவும்.

லயன் T. ஸ்ரீவிமலேஸ்வரன்
*கழகத்தலைவர்*

லயன் S.V. பரமேஸ்வரன்
கழகசெயலாளர்.

(69500) **மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மக்கள் சேவையில் தொய்வு வேண்டாம்

கிராமத் தலைமைக்காரர்கள் பின்னர் விதானைமார்களாக மாறி இப்போது கிராம சேவை அலுவலர்கள் - கிராம சேவையாளர் - என்ற பதவிப் பெயருடன் மக்கள் பணி - அரச பணி - ஆற்றிவருகிறார்கள்.

கிராமத் தலைமைக்காரர்கள் முறை ஆங்கிலேயர் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. தங்கள் நிர்வாக முறையின் ஓர் அங்கமாக - ஒருவகையில் பிரதிநிதியாக என்றும் கூறலாம் - அந்தந்தக் கிராமப் பகுதிகளின் நிர்வாகத்தின் குறிப்பிடத்தக்க அளவு பணிகள் கிராமத் தலைமைக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

அனேகமாகக் குறிப்பிட்ட பகுதியில் செல்வாக்குப் படைத்தவர்களையும் உயர்குழாத்தைச் சேர்ந்தவர்களையுமே பிரிட்டிஷ்காரர் கிராமத் தலைமைக்காரர்களாக நியமித்தனர். அதனால் அந்தந்தப் பகுதிகளைக் கட்டியாளும் அதிகாரக்காரர்களாக அவர்கள் விளங்கியதும் உண்டு.

அடுத்து வந்தவர்கள் விதானைமார்கள். அவர்களும் முன்னையவர்கள் போலவே அதிகாரக்காரர்களாகவும் செல்வாக்கு மிக்கவர்களாகவும் விளங்கினர். மக்கள் சேவையைச் சொந்தச் சேவையாக்கியதாகக் கூறப்பட்டதுமுண்டு.

முன்சொன்ன இரண்டு வகையினரும் குறிப்பிட்ட கிராமத்தைச் சேர்ந்தவர்களாகவும், பதவி கிடைத்த நாள்முதல் அதிலிருந்து இளைப்பாறும்வரை அங் கேயே இடமாற்றமின்றி பணிபுரியக் கூடியதாகவும் இருந்தமையே அவர்களின் அதிகாரத்தனத்துக்கும் செல்வாக்குக்குக் காரணம் என்று கூறலாம்.

கிராம சேவையாளர் அல்லது கிராம சேவை அலுவலர்கள் முறை, மக்களின் தேவைகளை அவர்கள் இலகுவாக நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏற்ற வகையில், மக்களுக்குரிய சேவைகளை முன்னிலைப்படுத்தி மாற்றி அமைக்கப்பட்ட ஒன்றாகும். இன்றைய கிராம சேவை அலுவலர்களில் மிகப் பலரும் தமக்குள்ள கடமைகளைச் செவ்வனே செய்கிறார்கள்; ஒரு சில விதிவிலக்குகள் இல்லை என்று சொல்லிவிட முடியாது.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரையில் கிராமசேவை அலுவலர்களின் பணி இன்று மிகவும் முக்கியமானதும் பன்முகப்படுத்தப்பட்டதாகவும் மாறிவிட்டது. அதனால் அவர்களின் வேலைப் பளுவும் அதிகரித்துள்ளது.

அதாவது, யாழ்.மாவட்டத்தில் வாழும் மக்கள், முன்னைய சாதாரண காலங்களைவிட இப்போது கிராம சேவையாளர்கள் மூலம் நிறைவேற்ற வேண்டிய தேவைகள் எண்ணிக்கையில் பெருகிவிட்டன.

கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் உலர் உணவு விநியோகம் தொடர்பான செயற்பாடுகளில், நடைமுறைகளில் கிராம அலுவலரின் பணி பிரதானமாகிறது. அதேபோன்று வெளிமாவட்டங்களுக்குப் பிரயாணம் செய்வோர் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறும் நடைமுறைக்கும் அவர்களின் சிபார்சு பிரதானம். ஒரு வகையில் பார்த்தால் அவர்களின் பொறுப்புகளும் பணிப்பளுவும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

அந்தவகையில் நோக்கும்போது, கிராம அலுவலர் ஒருவர் இரண்டு பிரிவுகளுக்குப் பொறுப்பாகக் கடமையாற்றுவதால் இரண்டு வகைகளில் கஷ்டங்களும் பிரச்சினைகளும் தோன்றுகின்றன.

ஒன்று -

பொதுமக்கள் தமது பலதரப்பட்ட தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றுவதில் தாமதங்கள் உண்டாகின்றன. அதனால் அவர்களின் சிரமங்களும் இடைஞ்சல்களும் அதிகரிக்கின்றன.

இரண்டு-

சம்பந்தப்பட்ட கிராமசேவகரின் பணிக்கஷ்டங்கள் அதிகரித்திருக்கின்றன. அதனால் அவர் இரண்டு பிரிவு மக்களும் திருப்தி அடையக் கூடியதாகப் பணியாற்ற முடியாத ஒரு தொய்வு நிலை உண்டாகிறது. அதனால் அவர் மக்களின் நன்மதிப்பை இழக்க நேரிடுகிறது.

ஆகவே, குடாநாட்டைப் பொறுத்தளவில், இன்றைய அசாதாரண சூழ்நிலையில், ஒரு பிரிவுக்கு ஒரு கிராம சேவையாளர் என்ற ஆளணி வளம் முழுமையாக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மொத்தம் 435 கிராம சேவை அலுவலர் பிரிவுகள் உள்ளன. அவற்றில் 141 பிரிவுகளுக்கு உத்தியோகத்தர்கள் இல்லை. வேறு பிரிவுகளுக்குரிய அலுவலர்களே அந்தப் பகுதிகளுக்குரிய மக்களின் தேவைகளையும் நிறைவேற்றவேண்டியுள்ளது. சில கிராமசேவையாளர் பிரிவுகளில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக அலுவலர் எவரும் இல்லை. ஆறு மாதத்திற்கு ஒருவர் மூன்று மாதத்திற்கு மற்றவர் என்று தற்காலிக கடமைகளுக்கு அமர்த்தப்படுகிறார்கள். அதனால் மக்களுக்கு கஷ்டங்கள் சிரமங்கள் அதிகம். கிராம சேவையாளர்களும் வேலைச் சுமையால் மக்கள் திருப்திக்குப் பணியாற்ற முடியாதிருக்கிறார்கள். மக்களிடம் கெட்ட பெயரும் வாங்கவேண்டி நேரிடுகிறது.

கொழும்பு அரசாங்கம், தமிழ் மக்களுக்குரிய சேவைகளில் மாற்றாந்தாய்ப் போக்குடன் செயற்படுகிறது என்பது ஒன்றும் புதிதல்ல.

எனினும் குடாநாட்டு மக்களின் இன்றைய தேவையை நிறைவேற்றுவதற்கு மேலிடத்திற்கு உரிய வகையில் உந்துதலும் அழுத்தமும் கொடுக்க வேண்டிய தேவை இங்குள்ள அதிகாரிகளின் பொறுப்பு. இந்த உடனடித் தேவையின் அவசரத்தையும் அவசியத்தையும் வலியுறுத்தி காரியத்தைக் கைக்கு வரச் செய்யவேண்டும் கிரமே சேவையாளர்களின் சேவை ஏனைய அரச அலுவலர்களை விட மக்களுடன் மிக நெருக்கமுடையது. அது மேம்படுத்தப்படவேண்டிய ஒன்றாகும்.

குடாநாட்டின் கிராம சேவை அலுவலர் ஆளணியில் 32.41% பற்றாக்குறை நீடிப்பது சிறிய விவகாரம் அல்ல. மக்களுக்குரிய சேவையில் பெரிய தொய்வும், நலிவும் இடைவெளியும் நிரந்தரமாகக் கூடாது என்பதை வலியுறுத்துகின்றோம். இதனை ஓர் அவசர, அத்தியாவசிய தேவையாகக் கருதி மக்கள் குறைதீர்க்கப்படவேண்டும்.

# யுத்த நிறுத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்

## இந்துமாமன்றம் கோருகிறது

யாழ்ப்பாணம், டிசெ.30

யுத்த நிறுத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி சகல இராணுவ நடவடிக்கைகளும் பலாத்காரச் செயல்களும் நிறுத்தப்பட்டு எமது சகோதர, சகோதரிகளின் துயரங்கள் உடனே முடிவிற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை இந்து மா மன்றம் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

அரசியல் சார்பற்ற முறையில் மனித நேயப்பணிகளில் ஈடுபட்டுவரும் இந்து அமைப்புக்களின் கூட்டு நிறுவனமான எமது மாமன்றம் இந்நாட்டு இந்து மக்களின் குரலாகத் தொடர்ந்தும் ஒலித்துவரக் கடமைப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் இந்துக்களாக இருக்கும் இந்நாட்டின் தமிழ் பேசும் மக்கள் - குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வாழ்பவர்கள் மட்டு மல்ல, மலையகம் மட்டும் தென்னிலங்கையின் பல்வேறு இடங்களிலும் இருப்பவர்கள் அனுபவிக்கும் சொல்லொணாத் துயர்களையும், வேதனைகளையும் கண்மூடித்தனமாக கைதுசெய்யப்பட்டு துன்புறுத்தப்படுவதையும் கொலைகள், கடத்தல்கள் முதலிய கொடுமைகளால் அல்லலுறுவதையும் சகலரின் கவனத்திற்கும் மீண்டும் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மனிதாபிமான அடிப்படையில் இம்மக்களின் வேதனைகள் அணுகப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறோம். யுத்த நிறுத்த நடவடிக்கை முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். ஏ9, ஏ15 பாதைகள் உடன் திறக்கப்பட வேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்தும் நிலையான - என்றும் நிலைக்கும் நியாயமான அரசியற் தீர்வைக் காணக் கூடிய சமாதானப் பேச்சுவார்த்தைகள் எதுவித தாமதமின்றி ஆரம்பிக்கப்பட வேண்டும். யுத்தமோ, பலாத்கார நடவடிக்கைகளோ இந்த நாட்டில் சமாதானம் பிறக்க வழி வகுக்க மாட்டாது.

வடக்கு, கிழக்கு மக்களைத் தொடர்ந்தும் புறக்கணிக்காது அந்த மக்களுக்கு அவசியமாகத் தேவைப்படும் உணவுப் பொருள்கள், மருந்து வகைகள் உட்பட சகலவற்றையும் அனுப்பவும் கல்வி மற்றும் அத்தியாவசிய வசதிகளை வழங்கவும் அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது என்பதால் அவற்றை உடன் வழங்க ஏ9 வழிப் பாதை திறக்கப்படுவது முக்கியமானது. இப்பொழுது அவர்களுக்கு வழங்கப்படும் கட்டுப்படுத்தப்படும் வசதிகள் அவர்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும். இந்நாட்டின் ஏனைய பகுதிகளில் வசிக்கும் மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும், வசதிகளையும் அவர்களுக்கும் வழங்குவது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும்.

பாரெல்லாம் பரவியிருக்கும் இந்து நிறுவனங்களும் இந்து மக்களும் இப்போது தந்து வரும் ஆதரவும் உதவியும் போதாது என்பதால் அவர்களுக்கும், எமது சகோதர சகோதரிகளின் பிரச்சினைகளில் அக்கறை எடுத்து மேலும் உதவ வேண்டும் என்றும் பகிரங்க வேண்டுகோள் விடுக்க விரும்புகிறோம்- என்றுள்ளது. (202)

## பாடசாலைகளின் புதிய கல்வியாண்டு புதனன்று ஆரம்பம்

புதிய கல்வியாண்டின் 2008 ஆம் ஆண்டின் முதலாம் தவணையின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக சகல அரச, தனியார் பாடசாலைகளும் எதிர்வரும் புதன்கிழமை, ஜனவரி 2ஆம் திகதிஆரம்பமாகவுள்ளன. (202-51)

## சுகாதாரத் திணைக்கள கண்காணிப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்குமான மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களை இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.(1-2)

## கண்பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் கண்பரிசோதனை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் இந்நிகழ்வில் கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன் விழிவெண்படல பாதிப்புற்றோரை இனங் கண்டு சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளார். (2)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி - | 15 திங்கட்கிழமை |
| | 31.12.2007 |
| திதி : | அட்டமி |
| | பின்னிரவு 5.32 |
| நட்சத்திரம் : | உத்தரம் காலை 6.34 |
| சுபநேரம் : | 12.29-1.59 |
| ராகுகாலம் : | 07.59-08.29 |

## புதுவருட பண்டிகையை முன்னிட்டு குடாநாட்டு வங்கிகளின் சேவை நேரம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

புதுவருடப் பண்டிகையை முன்னிட்டு வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல் சேவைகளுக்காக யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் மேற்றரக் கிளை நாளையும் புதுவருட தினமான நாளை மறுதினமும் காலை 8.30 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணிவரை திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

* * *

மக்கள் வங்கிக் கிளைகள் புதுவருட தினத்தை முன்னிட்டு நாளை காலை 10.30 மணிவரைக்கும் நாளை மறுதினம் வழமையான சேவை நேரத்திலும் வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல் சேவையை மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

* * *

தேசிய சேமிப்பு வங்கியின் கிளைகள்புதுவருடபண்டிகையை முன்னிட்டு நாளை முற்பகல் 10 மணி வரைக்கும் நாளைமறுதினம் வழமையான சேவை நேரத்தில் வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல் சேவையை மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

* * *

கொமர்ஷல் வங்கி புதுவருட பண்டிகையை முன்னிட்டு நாளை யும் நாளைமறுதினமும் வழமையான சேவை நேரத்தில் வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல் சேவையை மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

* * *

செலான் வங்கி புதுவருட பண்டிகையை முன்னிட்டு நாளை பிற்பகல் 3 மணி வரைக்கும் நாளைமறுதினம் வழமையான சேவை நேரத்தில் வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல் சேவையை மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (202-51)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.28

தென்மராட்சி கல்வி, வலய உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், சேவைக்கால முதன்மை ஆசிரியர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் அடுத்த வருடத்துக்குரிய கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (202-207)

## பிறப்புச்சான்றிதழ் வழங்கும் பணி நாளை நிறுத்தம்

யாழ்ப்பாணம், டிசெ.30

யாழ். செயலக பதிவாளர் பணிமனையில் பிறப்பு ,இறப்பு விவாகச் சான்றிதழ்களுக்கான விண்ணப் பங்கள் நாளை திங்கட்கிழ்மை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என மேலதிக பதிவாளர் எஸ்.பிரபாகரன் அறிவித்துள்ளார்.

வருட இறுதிப்பணிகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் வழமைபோல் நாளைமறுதினம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார். (1)

## ஆழிக்குமரன் ஆனந்தன் பலதுறைகளில் சாதனை படைத்தவர்

உலக சாதனைகள் பலவற்றை நிகழ்த்தி எமது மண்ணுக்குப் பெருமை சேர்த்த ஆழிக்குமரன் ஆனந்தன் 31.12.1982 அன்று இரவு பிலியர்ட்ஸ் தடியை உயர்த்துவதில் உலக சாதனை படைத்தார். 1981 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி பிரித்தானிய வீரரான ஜே.எம்.மில்ஸ் என்பவர் நிலைநாட்டிய சாதனையை ஆழிக்குமரன் ஆனந்தன் முறியடித்தார்.



யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் 1983ஆம் ஆண்டு பிறக்கும் நேரம் ஆழிக்குமரன் ஆனந்தன் இந்தச் சாதனையை நிகழ்த்தினார். பிரிட்டிஷ் வீரர் 720 தடவைகள் தடியை உயர்த்தி சாதனை படைத்திருந்தார். ஆழிக்குமரன் ஆனந்தன் அதை விட மூன்று மடங்கு அதிகமாக 2250 தடவைகள் தடியை உயர்த்தி சாதனையை நிலை நாட்டினார்.

யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் 31.12.1982 அன்று இரவு 9.29 இற்கு தனது சாதனையைத் தொடங்கிய ஆழிக்குமரன் ஆனந்தன் மறுநாள் அதிகாலை 1.1.1983 1.35 இற்கு நிறைவு செய்தார்.

ஆயிரக்கணக்கான ரசிகர்கள் திரண்டிருக்க மல்லாகத்தைச் சேர்ந்த நடராசா என்பவரும் அன்றைய தினம் அதே மேடையில் பாரமான இரும்புக்குண்டுகளை முழங்கை மடிப்புக்களில் வைத்து ''நூறு தடவைகள் மாறி மாறி எறிந்து பார்வையாளர்களைக் கவரச் செய்தார். வேறு பல சாகச நிகழ்ச்சிகளும் அன்றைய தினம் நடைபெற்றன.

ஆழிக்குமரன் ஆனந்தன் மேலும் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

பாக்குநீரிணையை நீந்திக் கடந்த அந்த இளம் வீரனின் ஏனைய சாதனைகளை அவ்வப்போது நினைவு கூருவோம்.

இப்போது ஞாயிற்றுக்கிழமைகளில் சைக்கிள் கடைகள் கூடத் திறப்பதில்லை. முன்பு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலை வேளையில் ஏதாவது ஒரு கலை நிகழ்ச்சி அல்லது அரசியல் நிகழ்ச்சி திறந்த வெளியரங்கில் நடைபெறும். பிரபல சினிமா பாடகர் ஜேசுதாஸின் கச்சேரியும் இங்குதான் நடைபெற்றது. திறந்த வெளியரங்கு யுத்தம் காரணமாக பலத்த சேதமடைந்துள்ளது. அத்துடன் திறந்த வெளியரங்குக்குச் செல்லும் பாதைகளும் மூடப்பட்டுள்ளன.

-தாண்டவன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இப்போதைய அளவில் மின்சாரம் கிடைக்காத நிலை உருவாகிவருகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.30

குடாநாட்டில் இப்போது விநியோகிக்கப்படும் மின்சாரத்தை அடுத்த மாதம் முதல் அதே அளவில் வழங்க முடியாத சூழ்நிலை ஒன்று உருவாகி வருவதாக மிக நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.

தற்சமயம் விநியோகம் செய்யப்படும் மின்சாரத்தில் பெரும் பகுதியை - 15 மெகாவாட்ஸ் மின்சாரத்தை - சுன்னாகத்தில் இயங்கும் 'அக்கிரிக்கோ' என்ற பிரிட்டிஷ் நிறுவனம் மின்சார சபைக்கு வழங்கி வருகின்றது.

இந்த நிறுவனத்தின் ஒப்பந்த காலம் நாளையுடன் முடிவடைகிறது.

அதனுடனான ஒப்பந்த காலம் முடிவடைவதற்கு முன்பதாக - ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் மின் நிலையம் ஒன்றை இயக்க 'யூரோ ஏசியா' என்ற சீன நிறுவனத்துடன் மின்சார சபை ஒப்பந்தம் செய்திருந்தது.

ஆனால் அந்த நிறுவனம் மின் நிலையத்தை அமைப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையை மேற்கொண்டதாயினும் இன்னமும் மின் நிலையம் அமைக்கவில்லை.

பெரும்பாலும் அடுத்த மார்ச் மாதத்துக்கு முன்னர் மின் நிலையத்தை அமைப்பதாக அந்த நிறுவனம் மின்சார சபைக்குத் தெரிவித்துள்ளது.

மின் பற்றாக்குறையைத் தவிர்க்கும் நோக்குடன் இப்போது மின்சார விநியோகத்தை வழங்கும் 'அக்கிரிக்கோ' நிறுவனத்தை மார்ச் மாதம் வரை விநியோகத்தை தொடருமாறு மின்சார சபை அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

அத்தகைய ஒரு கட்டத்தில் ஒப்பந்தத்தை ஒருவருடத்துக்கு நீடிக்க முடியும் என்றும் மூன்று மாதங்களுக்கு மட்டும் நீடிக்க முடியாது என்றும் அந்நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனராம்.

எனினும் மேலும் மூன்று மாதங்களுக்கு - மார்ச் மாதம் வரை விநியோகத்தை தொடருமாறு அந்த நிறுவனத்தின் அதிகாரிகளுடன் மின்சாரசபையின் உயர் அதிகாரிகள் இப்போது தீவிர பேச்சுக்களை நடத்தி வருகின்றனர். (அ-1)

## கோத்தபாய நேற்று வவுனியா விஜயம்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முப்படைத் தலைமை அதிகாரி எயர் ஷீவ் மார்சல் டொனால்ட் பெரேரா, இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் உயர் இராணுவ அதிகாரிகளுடன் நேற்று வவுனியாவுக்கு வருகை தந்தார்.

பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட இக்குழுவினர் வன்னிப் பிரதேச கட்டளை அதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுடன் பாதுகாப்பு நிலைவரம் குறித்து கலந்துரையாடினர். (அ-2)

## மனோ கணேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து எச்சரித்து வருகின்றனர். இந்நிலையில் பொலிஸ் பாதுகாப்பு விலக்கப்பட்டமை அரசின் தலையீட்டையே காட்டுகின்றது என்று மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

''நான் எந்த நாட்டிலும் தஞ்சம் கோரவோ அல்லது நிரந்தரமாக நாட்டைவிட்டு வெளியேறவோ போவதில்லை. இது ஒரு தற்காலிகமான எற்பாடே'' என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மனோ கணேசன் எம்.பியின் அலுவலகத்தில் குண்டு ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து நேற்றுக்காலை அங்கு சென்ற குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் அலுவலகத்தை சல்லடை போட்டுத்தேடினர். எனினும் அங்கு குண்டு எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை.(அ-2)

## நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையில் மோதல் இடம்பெற்றது. இந்த மோதலில் விடுதலைப்புலிகளின் 4 உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் என்று பலாலி ஊடகத் தகவல் பிரிவு தெரிவித்தது.

நாகர் கோயில் முன்னரங்கப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 5.20 மணியளவில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; விடுதலைப் புலி உறுப்பினரும் கொல்லப்பட்டார் என ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (அ-1)

## போர்நிறுத்த ஒப்பந்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தமது விசேட செவ்வியில் மேலும் தெரிவித்திருப்பவையாவன -

போர்நிறுத்த ஒப்பந்தம் வெறுமனே காகிதத்தில் மட்டுமே உள்ளது. செயலளவில் அது நடைமுறையில் இல்லை என்பதனைக் காணமுடிகிறது. அது பெரும் கேலிக்குரியதாகிவிட்டது.

போர்நிறுத்த ஒப்பந்தம் என ஒன்றில்லை என்று அறிவித்து அதற்கு முடிவு கட்டுவதே அறிவுடைமை என்று நான் கருதுகிறேன். போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்று இருப்பதாக நாம் ஏன் மக்களை ஏமாற்ற வேண்டும்?

விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பயங்கரவரவாத இயக்கம். அதனை நாம் தடை செய்யவேண்டும். அதனுடன் நாம் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறோம். பயங்கரவாத இயக்கத்துக்கு தீர்வு எதனையும் வழங்கவேண்டிய தேவை எமக்கு இல்லை. தமிழ் மக்களுக்கே தீர்வினை வழங்கவேண்டும் விடுதலைப் புலிகள் தமிழ்மக்களில் ஒரு சிறுபகுதியினரே.

விடுதலைப் புலிகளை தடை செய்வதற்கு முன்னர் அவர்கள் வழியை மாற்றிக் கொள்வதற்கு ஜனாதிபதி காலஅவகாசம்' ஒன்றை வழங்குவார்.

இப்போது ஈட்டப்பட்டுவரும் இராணுவ வெற்றிகள் நிச்சயமாக சமாதானத் தீர்வு ஒன்றுக்கு வழி செய்யும் - என்று அவர் கூறினார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டால் விடுதலைப் புலிகளை முழுமையாக அழிப்பதென்பதே அரசாங்கத்தின் உண்மையான கொள்கை என்றாகிவிடும் - என்று தேசிய சமாதானப் பேரவையின் இயக்குநர் ஜெகான் பெரேரா 'ரொய்ட்டருக்கு' கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

அத்தகைய ஒரு நிலைப்பாட்டில் அரசு இராணுவத் தீர்வில் தோல்விகாணுமாயின் அதன் பின்னர் அரசாங்கம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாற்று மூலோபாயம் எதனையும் நாடமுடியாது - என்றும் கூறியுள்ளார். (அ)

# காரின் கூரை தலையில் இடித்ததாலேயே பெனாஸிர் உயிரிழந்தார் என்கிறது அரசு

இஸ்லாமாபாத்,டிசெ.30

பெனாஸிர் பூட்டோ எவ்வாறு உயிரிழந்தார் என்பது குறித்து பெரும் சர்ச்சை எழுந்திருகின்றது.

காரின் மேற்கூரையை திறந்து நின்றிருந்த பெனாஸிர் துப்பாக்கிதாரி சுட்ட போது குண்டுபடாமல் தப்பிப்பதற்காக பதற்றத்துடன் தலை குனிந்தபோது காரின் இரும்புக் கூரையில் தலை வேகமாக மோதியதில்தான் பெனாஸிர் உயிரிழந்தார். துப்பாக்கிக் குண்டு பாய்ந்தோ, வெடி குண்டுச் சிதறல் தாக்கியோ அவர் உயிரிழக்கவில்லை என்று பாகிஸ்தான் அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால், அரச அதிகாரிகளின் இந்த விளக்கத்தை பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி நிராகரித்துள்ளது . சம்பவத்தின்போது பூட்டோவின் காருக்குப் பின்னால் மற்றொரு காரிலிருந்து நடந்தவற்றை நேரில் கண்டவர் அவரது உதவியாளர் ஷெர்ரி ரஹ்மான் அரசாங்கத்தின் விளக்கம் அர்த்தமற்றது என்றார்.

பூட்டோவின் உடலை, இறுதிச்சடங்குகளுக்காக நீராட்டும்போது அவரது தலையின் பின்பக்கம் குண்டடிபட்ட காயம் இருந்தது என்று ஷெர்ரி ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ராவல் பிண்டி மருத்துவமனை டாக்டர் ஒருவர் கூறுகையில் பெனாஸிர் துப்பாக்கியால் சுட்டு இறக்கவில்லை. அதற்கான அறிகுறிகள் உடலில் இல்லை மனித வெடிகுண்டு நடத்திய தாக்குதலாலே அவர் உயிரிழந்தார் என்று கூறியிருக்கிறார். (அ-2)

## 337 ஓட்டங்களால் ஆஸி.வெற்றி!

மெல்போண், டிசெ. 30

மெல்போணில் இடம்பெற்று வந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா 337 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

499 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தில் 161 ஓட்டங்களுக்குள் சுருண்டு படுத்தது. மிற்செல் ஜோன்ஸன் மற்றும் பிரட் லீ ஆகியோர் இந்திய அணியை புரட்டியெடுத்தனர். மறுமுனையில் சுழற்பந்து வீச்சாளர் பிரட் ஹொக்கும் சிறப்பாக பந்து வீசினார்.

இந்திய அணியின் இரண்டாவது இன்னிங்ஸில் ஓரளவு சிறப்பாக ஆடிய கங்குலி 40 ஓட்டங்களையும் லக்ஸ்மன் 42 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். மற்றைய வீரர்கள் எவரும் 15 ஓட்டங்களுக்கு மேல் பெறவில்லை. ஜோன்ஸன் 3 விக்கெட்டுக்களையும் பிரட் லீ, பிரட் ஹொக் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனத்தின் வளாகம் அழிக்கப்பட்டது. அந்த நிறுவன அழிவுகளுடன் அப்படியே பேணப்பட்டு, நேற்றுமுதல் மக்கள் பார்வைக்கு விடப்பட்டுள்ளது.

மக்கள் பார்வைக்கு விடும் ஆரம்ப நிகழ்வு நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் 'புலிகளின் குரல்' நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் தலைமையில் நடைபெற்றது. (அ-2)

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதல் இடம்பெற்றது. சிறைச் சாலை அதிகாரிகள் சம்பவத்தில் எவ்விதத்திலும் சம்பந்தப்படவில்லை என்று சிறைச்சாலைகளின் ஆணையாளர் மேஜர் ஜெனரல் வஜிர விஜயகுணரத்தனா தெரிவித்துள்ளார். (அ-1)

## யாழ்.நோக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானி சாதுரியமாக அதனை இரத்மலானைக்கு திரும்பச் செலுத்தி அங்கு இறக்கினார் என்றும் அதனால் அனர்த்தம் தவிர்க்கப்பட்டதாக த் தெரிவிக்கப்பட்டது.

மற்றொரு விமானத்தில் ஐ.நா அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.(அ-1)

## மன்னார் பரப்பாங்கண்டலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டு படைத்தரப்புக்கு பாரிய இழப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இருபதுக்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளனர். ஐம்பதுக்கும் அதிக படையினர் காயமடைந்துள்ளனர்.

மன்னாரில் நேற்று சனிக்கிழமை அதிகாலை 5.30 மணிமுதல் உயிலங்குளம், பரப்பான்கண்டல் பகுதிகளில் ஸ்ரீலங்கா படையினர் மூன்று முனைகளில் பாரிய முன்நகர்வு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

ஆட்லறி, பல்குழல் எறிகணை என்பவற்றின் மிகச் செறிவான சூட்டாதரவுடன் கனகர போர்க்கலங்களுடன் ஸ்ரீலங்கா கொமாண்டோக்கள் மூன்று முனைகளில் முன்னகர்வுகளை மேற்கொண்டனர்.

அதற்கு எதிராக விடுதலைப் புலிகளின் படையணிகள் தீவிர முறியடிப்புத் தாக்குதலை நடத்தியுள்ளன.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் படைத்தரப்பின் இரண்டு முனைகளின் முன்னகர்வுகள் நேற்று மாலை முறியடிக்கப்பட்டன. படையினர் பழைய நிலைகளுக்கு விரட்டப்பட்டனர். ஒரு முனையில் முறியடிப்புத் தாக்குதல் தீவிரமாக இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்த இரு முனை முறியடிப்பு மோதலில் தாய்மண் மீட்புக்காக போராளிகள் மூவர் தங்கள் உயிர்களை ஈகம் செய்தனர். இவ்வாறு புலிகள் நேற்றிரவு அறிவித்தனர்.

### படைத்தரப்புத் தகவல்

மன்னார் பரப்பான்கண்டல் மேற்குப் பிரதேசத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றும் நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர். அந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பு முன்னரங்கில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரம் வரை பாதுகாப்புப் படையினர் முன்நகர்ந்து உள்ளனர் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையம் நேற்றிரவு தெரிவித்தது.

மோதலில் 20 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் இரண்டு தளபதிகளும் அடங்குவர் என்றும் ஊடக நிலையம் தெரிவித்தது. (அ-1-2)

01.01.2008 CB Computer Academy 09.00am
Station Road, Kondavil. 021-4590291
G.C.E O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
புதிய பிரிவுகள் 01.01.2008 அன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பம்.
25.12.2007 அன்று நடைபெற்ற கருத்தரங்கிற்கு சமூகமளிக்காதவர்களும் 01.01.2008ஆம் திகதிக்கு முன்னர் சலுகைக் கட்டணம் பற்றிய விபரங்களை அறிந்து பதிவுகளை மேற்கொள்ளவும்.
மேலதிக விபரங்களுக்கு தேசில

IDM மானிப்பாயில்
இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரே கணனி நிறுவனம்
O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு விசேட சலுகைக்கட்டணம், இலவச பாட நூல்கள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
முகாமலை லேன், (மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
(MS. OFFICE, DTP, HARDWARE, AUTOCAD, E-KIDS)
Our International University Affiliation
@. University of Wolverhampton - UK @. Northumbria University - UK
@. London Metropolitan University - UK @. Charles Sturt University - Australia
Phone - 021 222 9901
Web: www.idm.org / www.idm.edu

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் குணரத்தினம்

நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னம்லம்பலம் குணரத்தினம் நேற்று(29.12.2007) சனிக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - வள்ளியம்மையின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கம்மாவின் அன்பு மருமகனும் சற்குணராசா(கட்டார்), கிருஷ்ணராஜா(வேலணை பிரதேச சபை உப அலுவலகம், புங்குடுதீவு), நிர்மலா, கேசவராஜா, சிவானந்தராஜா, சிவானந்தி, மகேஸ்ராஜா, பரமராஜா(இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் குகனேஸ்வரியின் (ஆசிரியை முத்துதம்பி வித்தியாலயம், திருநெல்வேலி) மாமனாரும் ஹரிஸ்ணவியின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.12.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்க அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கரியைக்காக நயினாதீவு சல்லி பரவை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.கிருஷ்ணராசா
(மகன்-வேலணை பிரதே சபை, உப அலுவலகம், பங்குடுதீவு)

7ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

புதிய கல்வியாண்டு-2008
தரம் 1 முதல் O/L வரை வகுப்புகள் சிறப்பாக நடைபெறுகின்றன.
Gr.6,7,8 English Medium Class சிறப்பாக நடைபெறுகின்றன.
புதிய அனுமதிகள் ஜனவரி 15 வரை மட்டுமே வழங்கப்படும்.
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

A/L 2010
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் 05.01.2008 சனி 8மணி
கணித, விஞ்ஞான பிரிவு
ஆரம்பம் 05.01.2008 சனி 3மணி
புதிய அனுமதிகளை இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்
நாவலர்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org